# "ஆஸாத்"

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1. | சர்வஜித்துஸூ மாசிமீ 4உ 16—2—1948 ஹிஜ்ரி 1367 ரபீயுலாகிர்மீ 5உ திங்கட்கிழமை. | இதழ் 4.


"செய் அல்லது செத்து மடி"

## மகாத்மா திருஷ்டியில் மரணம்.

### என் வாழ்க்கையே நான் விடுக்கும் தூது.

முதல் நாளே தனக்கு சம்பவிக்கப் போகும் மரணத்தை மகாத்மா உணர்ந்திருந்தார் என்று மனு காந்தி அறிவித்தார். தனக்கு வந்திருக்கும் கடிதங்கள் அனைத்திற்கும் தானே பதில் எழுதப்போவதாகச் சொல்லி பஷூநாத்திடம் கடிதங்களை கேட்டார். கீழ்வரும் கருத்து கொண்ட குஜராத்தி பாஷையிலுள்ள ஒரு செய்யுளை எனக்கு படித்துக் காட்டினார்.

"உலகத்தின் ரீதியே அலாதி. விஷயங்களே வினோதமானவை. விளையாட்டுகளே வியப்புள்ளவை. தோல்வியை வெற்றியெனக் கொண்டிருக்கும் இந்த உலகத்துடன் சேர்ந்து இன்னும் எத்தனை நாள் விளையாடிக்கொண்டிருக்க முடியும்."

"தோணியில் இருப்பவனே! கரையை விட்டுச் செல். துடுப்பை தூக்கி எறி. மரணத்துடன் மோது; சுழலிலே விளையாடு, மூழ்கி நிரந்தர அமைதிக்கரை ஏறு."

125 வருஷங்கள் வாழ பாபூஜி விரும்பிய நாளும் ஒன்று உண்டு. ஆனால் சிறிது காலமாக அவர் இந்த உலகத்தில் உயிருடன் இருக்க விரும்பவில்லை. கடந்த சில தினங்களில் பாபூஜி தன் மரணத்தைக் குறித்து வெளியிட்ட சில கருத்துக்கள் பின்வருமாறு:-

**"தெய்வ நம்பிக்கை."**

ஜனவரி 9. சீக்கிரமாகவோ, மெதுவாகவோ மரணம் சம்பவித்தே தீரும். மனதிலிருந்து பயத்தை அகற்றி மக்கள் கடவுள்மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அவரே சர்வ வல்லவர். அவருடைய உத்திரவின்றி அணுவும் அசையாது.

**"வாழ்க்கையில் வெறுப்பு."**

ஜனவரி 12. இரண்டு டொமினியன்களிலும் அமைதி, சமாதானம் நிலவவில்லை யென்றால், எனக்கு வாழ்க்கையில் எவ்வித விருப்பமும் இல்லை.

**"மரணமே விமோசனம்."**

ஜனவரி 15. ஒவ்வொரு மனிதனும் ஒரு நாள் இறப்பது நிச்சயம் மரணத்திலிருந்து எவ்விதத்திலும் தப்ப முடியாது என்று இருக்கையில் சாக ஏன் பயப்பட வேண்டும். சகல துன்பங்களிலிருந்தும் மனிதனுக்கு விமோசனம் அளிக்கக்கூடிய பெருங்கருணையே மரணம்.

**"வாழ்க்கை கடவுளின் கையிலே"**

ஜனவரி 21. என்னுடைய வாழ்க்கை கடவுளின் கையிலே இருக்கின்றது. எனவே நான் முற்றிலும் பயமற்றவனாக இருக்கிறேன்.

## மௌலானாவுக்கு மகாத்மா அன்பளிப்பு.

### திரு குர்ஆன் பிரதிகள் கொடுத்தார்.

டில்லி, 3—2—48.

மகாத்மாஜி மறைவதற்கு 90-நிமிஷங்களுக்கு முன் ஜமீயத்துல் உலமாவின் பொதுக்காரியதரிசி மௌலானா ஹிப்சுர் ரஹ்மான் சாகிப் மகாத்மாவை சந்தித்தார். சிறிதுநேரம் பேசிவிட்டுதிரும்பிவெளியே வந்த பிறகு மகாத்மாஜீயின் காரியதரிசி பியாரீலால் ஓடிவந்து மகாத்மாஜீ மீண்டும் மௌலானாவை அழைப்பதாக அறிவித்தார். மௌலானா திரும்பி வந்த பொழுது மகாத்மாஜி திருகுர்ஆனின் இரண்டு பிரதிகளை கொடுத்து எடுத்துக்கொண்டு போகும்படிச் சொன்னார். பிறகு எடுத்துகொள்வதாகவும் மகாத்மாஜீயிடமே பிரதிகள் இருக்கட்டும் என்றும் மௌலானா வற்புறுத்தினர். அதற்கு மகாத்மாஜி "போதும். இப்பொழுது நீங்கள் அதை எடுத்துச் சென்று வைத்திருங்கள். அவசியம் ஏற்பட்டால் நான் திரும்பவும் தருவித்துக் கொள்கிறேன்" என்று சொல்லி பிரதிகளை மௌலானாவிடம் கொடுத்து வழியனுப்பினர். மகாத்மாஜியின் அன்பளிப்பு என்றுமே அவரை நமக்கு ஞாபக மூட்டுவதாயிருக்கும்.

# அண்ணலின் ஆத்மசாந்தி.

## முஸ்லிம்கள் பிரார்த்தனை.

கும்பகோணம்.
8—2—48.

அண்ணலின் ஆத்மசாந்திக்கு முஸ்லிம்களின் சார்பில் பிரார்த்தனைக்கூட்டம் ஒன்று மேலக்காவேரியில் நடந்தது. ஸ்ரீ C. ராமசாமி முதலியார் B.A.B.L., தலைமை வகித்தார். ஏராளமான ஹிந்து முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.

தலைவர் பேசுகையில் "இதற்கு முன் மஹான்களுக்கு நேர்ந்தது மகாத்மாவுக்கும் நேர்ந்து விட்டது. சாக்ரடீஸ், ஆப்ரஹாம் லிங்கன், ஏசுநாதர் போன்ற பெரியார்களின் முடிவு நமக்குத் தெரிந்திருக்கிறது. முகம்மது நபி அவர்கள் அனுபவித்த துன்பங்கள் சரித்திரத்திலே நாம் பார்த்திருக்கிறோம். ஆயினும் அவர்களின் ஒளி இன்றைக்கும் வீசிக்கொண்டிருக்கிறது. அது அழியாத உண்மை. அணையாத சுடர். பாபூஜி சுதந்திர இந்தியாவில் மக்கள் சுகமாக வாழ்வதைப் பார்க்க நிர்மாணத்துறையில் உழைத்துக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் கொல்லப்பட்டார் என்பதுதான் நமக்கு ஏற்பட்டிருக்கும் பெரிய மனவேதனைக்கு காரணம்." என்று குறிப்பிட்டார்.

பிறகு பேசிய ஸ்ரீ R. சக்கரவர்த்தி அவர்கள் மகாத்மாஜியின் நிர்மாண திட்டத்தை அனுஷ்டிப்பதன் மூலம் அவருடைய லட்சியம் வெற்றிபெற செய்யமுடியும். அதை ஜாதி மத பேதமின்றி நாம் அனைவரும் நிறைவேற்ற வேண்டியது நம் கடமை, என்று வற்புறித்தினர்.

பிறகு ஸ்ரீ G. கணேசன் அவர்கள் பேசுகையில் "மகாத்மாஜியின் அஸ்தியை கடலிலும், ஆறுகளிலும் சேர்க்கும்போது நம் மனதில் உள்ள கல்மிஷங்களை களைந்துவிட்டு பரிசுத்த மனதுடன் அன்பாக வாழ்ந்து இன்புற்றிருப்போமாக" என்று வேண்டினர்.

அ. இ. கா. க. மெம்பர் ஜனப். K. M. ஷரீப். பேசுகையில் "தான் பாபுஜியை 12-வருஷங்களுக்கு முன் சந்தித்ததையும் தமிழ் நாட்டு மக்கள் மீது பாபுஜிக்கு இருந்த அபார அன்பையும் பற்றி உருக்கமாக விளக்கினர். எல்லைபுரத்திலே தாக்கப்பட்டு பாபூஜி சிந்திய ரத்தம் பட்டாணியர்களிடையே எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார்கானைப் போன்ற தலைவர்களை தோற்றுவித்திருக்கிறது. மகாத்மாவின் ஆத்மீக தியாகம் 32-கோடி காந்திகளை தோற்றுவிக்க முடியும். உத்தமரை பின்பிற்றினுல் ஒவ்வொரு இந்தியனும் உலகத்திலேயே பெரிய மனிதனுக பிரகாசிப்பது நிச்சயம்" என்று முடித்தார்.

மௌலானு அப்துல் ஹக்கீம் பேசுகையில் "உலகப்பெரியார்கள் மறைந்த பிறகுதான் அவர்களுடைய லட்க்ஷியங்கள் மக்கள் மனதைக் கவர்ந்தன. பாபூஜி மறைந்து விட்ட போதிலும், அவருடைய லட்க்ஷியம் மக்கள் உள்ளத்திலே இடம் பெற்று விட்டது. அவருடைய லட்க்ஷியம் வெற்றியடைய நாம் அனைவரும் உழைப்போம். நம் எதிர்கால சுபிட்க்ஷ வாழ்க்கைக்கு அதுமே உத்திரவாதமளிக்க முடியும். நாம் இனி கண்ணீர்வடித்துக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. மக்கள் அனைவரும் எம்மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் சகோதரர்களாக சகிப்புத்தன்மையுடன் வாழவேண்டும் என்ற உயரிய லட்க்ஷியத்திற்காக பாபூஜி ஆயுள் முழுவதும் கழித்தார். அதற்காகவே ஆத்மீகத்தியாகமும் செய்தார். தலைமுறை தலைமுறையாக சகோதரர்களாக வாழ்ந்துவரும் ஹிந்து, முஸ்லிம்கள் தவறுன பிரசாரத்திற்கு இலக்காகி ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டதைப் பார்த்து மகாத்மா மனவேதனை அடைந்தார். மனவேதனையைக் கொண்டே உலகத்தை விட்டுச் சென்ற மகாத்மாஜியின் ஆத்மா சாந்தியடையுமாறு நாம் அனைவரும் நடந்து கொள்வோமாக." என்று கேட்டுக் கொண்டார்.

கடைசியில் பேசிய மௌலானு அப்துல் அஜீம், எல்லா மதங்களிலும் இருக்கும் உயரிய கருத்துக்களை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும், அதன் பிறகு வகுப்பு வாதம் தலைதூக்க முடியாதென்றும், சகலமதங்களிலும் உள்ள உயரிய லட்க்ஷியங்களை பாபூஜி தெரிந்து கொண்டிருந்ததால் எல்லோரையும் தன்னைச் சேர்த்தவர்கள் என்று அவர் பாவித்தார் என்றும், எல்லாமதங்களுக்கும் அடிப்படையிலே ஓர்மை உண்டென்றும், அடிப்படையிலே ஒன்றுபட்டவர்கள், ஒரே கடவுளால் சிருஷ்டித்து, ரக்ஷிக்கப்படும் மக்கள் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்வது பைத்தியக்காரத்தனம். என்றும், இனியாகிலும் மகாத்மாஜியின் அன்பு வாழ்க்கையை மேற்கொண்டு அவருடைய ஆத்மா சாந்தியடையும்படி நாம் நடந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஆதம்கனி சாகிப் வந்தனேபசாரம் கூற, கூட்டம் பிரார்த்தனையுடன் முடிந்தது.

சோகமே உருவெடுத்து கண்ணீர் வடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ஏராளமான முஸ்லிம்களை பார்த்த பிறகு, பாபூஜியின் ஆத்மீக தியாகம் மக்களின் உள்ளங்களில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தி விட்டதை சந்தேகிக்க இடமேயில்லை.

(நமது நிருபர்.)

# —: கடிதங்கள். :—

நாகை,
30—1—48.

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

தங்கள் "ஆஸாத்" எனும் சீரிய பத்திரிகை வெளி வந்திருப்பதைக்கண்டு அளவிலாத சந்தோஷம். மடமையில் மூழ்கி, வகுப்புவாத விஷத்தையுண்டு, பாழாய்போன பாகிஸ்தானுக்கு "ஜிந்தாபாத்" கோஷம்போட்டு, சுயநலக்கூட்டத்தின் தலைவர் ஜின்னாவின் கையில் வாங்கிக்கொடுத்துவிட்டு, உயிருக்கு மன்றுடிக்கொண்டிருக்கும் இந்திய முஸ்லிம்களுக்கு நல்வழிகாட்டுவதன்றி, வகுப்பு ஒற்றுமைக்கும் நேச பாவத்துடன் பழகுவதற்கும், முதன்மை ஸ்தானம் பெற்ற சென்னை மாகாணத்தில் வகுப்பு வாதக்கொள்ளியை வைத்துவிடமுயற்சிக்கும் நம் மாகாண லீக் தலைவர் இஸ்மாயில் சாஹிபின் போக்கையும் முறியடித்து சுதந்திர, ஐக்கிய, ஜனநாயக, இந்தியாவில் முஸ்லிம்களை தட்டி எழுப்பி முற்போக்கு வழியில் நடத்திச் செல்ல ஆஸாதுக்கு எல்லாம் வல்ல இறைவன் அனுக்கிரகம் செய்வானாக! ஆமீன்.

அன்பன்,
**வி. இ எம். ஹமீது யூசப் வதனி,**
நகர காங்கிரஸ் கமிட்டி, நாகை.

● ● ●

திருநெல்வேலி,
6—2—48.

மகாத்மாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க இவ்வூர் ஜும்மா மசூதியில் முஸ்லிம்களின் மாபெரும் கூட்டமொன்று நடந்தது. A. K. பிஜ்லி தலைமை வகித்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1948 பிப்ரவரி 6-ந்தேதி திருநெல்வேலி ஜங்ஷனை அடுத்துள்ள ஜும்மா மசூதியில்கூடிய திருநெல்வேலி முஸ்லிம்களின் இக்கூட்டம், திட்டப்படி கட்டுப்பாடுடன் நடந்த சதியின் காரணமாக ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கத்தைச் சேர்ந்த ஒரு வெறியனல் உலகம் தோற்றுவித்த மிகப் பெரிய மஹானும், இந்திய சுதந்திரத்தின் தந்தையும், அமைதி, சமாதானம், சத்தியம் இவைகளின் தூதரும், பொதுவாக மைனரிட்டிகளின் குறிப்பாக முஸ்லிம்களின் பாதுகாப்பாளரும் ஆகிய நம் மஹாத்மா காந்தியின் எதிர்பாராத மறைவுக்கும், அன்னார் வாழ்நாளில் மேற்கொண்ட முயற்சிகள் தடைபட்டதற்கும் மனப்பூர்வமாக வருந்துகிறது.

மேற்கூறிய சங்கத்தை சட்ட விரோதமாக்கியதைக்குறித்து திருப்தியடைவதுடன், அதனல் பரப்பப்பட்ட விஷத்தைப்போக்கும் வேலையில் சகல துறைகளிலும் சர்க்காருடன் ஒத்துழைப்பதாகவும் இக்கூட்டம் சபதம் செய்கிறது.

'பாபூஜி கொல்லப்பட்டார்' என்ற செய்தி கிடைத்தவுடன் சில விஷமிகளின் தவருன பிரச்சாரத்தினல் தாக்கப்படவிருந்த அப்பாவி முஸ்லிம்களை காப்பாற்ற பயனளிக்கத்தக்க முறைகளை கையாண்ட ஜில்லா கலெக்டர் அவர்களையும், ஜில்லா போர்டு போலீஸ் சூப்பரிண்டெண்டெண்ட் அவர்களையும், கட்டுப்பாடுடன் அமைதியாக நடந்துகொண்ட பொதுமக்களையும் இக்கூட்டம் பாராட்டுகிறது.

காபிகள்:—இந்தியாவின் பிரதம மந்திரி, சென்னை மாகாண பிரதம மந்திரி, அபுல் கலாம் ஆஸாத், டாக்டர் சுப்பராயன், திருநெல்வேலி ஜில்லா கலெக்டர், திருநெல்வேலி போலீஸ் சூப்பரிண்டெண்டெண்ட், பிரஸ், இவைகளுக்கு அனுப்பப்பட்டது.

7—2—48,
'பைதுல் அமான்'
திருநெல்வேலி ஜங்ஷன்.

A. K. பிஜ்லி,
தலைவர்.

O O O

நாகப்பட்டினம்:
27—12—47.

## "ஆஸாது"க்கு வரவேற்பு

சென்னை மாகாணத்திற்கு, குறிப்பாய் தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்கு இருந்துவந்த பெருங்குறை ஒன்று உண்டென்றல், அதுதான் "ஆஸாத்"போன்ற முஸ்லிம் தேசியப் பத்திரிகை இல்லாக்குறை. தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்கு தேசிய உணர்ச்சியை வெகு சிரமத்துடன் சதா புகட்டிவந்த மௌலானா அவர்களின் தலைமையில் இது வெளிவருவது நம் அதிர்ஷ்டம். இதன் மூலம் நம் முஸ்லிம்கள் தங்கள் உண்மை நிலையை அறிந்து நல்வழிபெற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக!

மௌலானா, K. M. முகம்மது சாலிஹ் சாகிப்.

திண்டிவனம்,
10—2—48.

மகாத்மா காந்திஜின், மரண செய்தி கேட்டவுடன் நகர முஸ்லிம்கள் அனைவரும் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்தனர். 2—2—48 அன்று ஓர் மௌன ஊர்வலம் வந்து, புதிய மசூதியில் கூடியது. ஜனப் R. A. சுபஹான் (காஜி) அஹமத் உசேன் சயீத், பஞ்சாபகேச சாஸ்திரி முதலியோர் மகாத்மாவின் அரிய சேவைகளைப்பற்றி சொற்பொழிவாற்றினர்கள். விசேஷ பிரார்த்தனைக்குப் பிறகு மகாத்மாவின் திட்டங்களை நிறைவேற்ற பிரதிக்ஞை எடுத்துக்கொண்டு, அனுதாப தீர்மானங்கள் நிறைவேற்றி ஜவஹர், தேவதாஸ் காந்தி, சென்னை பிரதமர் இவர்களுக்கு அனுப்பப்பட்டது,

R. A. சுபஹான்

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 16—2—48 திங்கட்கிழமை { இதழ் 4

# முற்போக்கு வளர்க!

1906-முதல் இன்று வரையுள்ள இந்திய சரித்திர ஏடுகளை பிரட்டினால், ஒரே சமயத்தில் தோற்றுவிக்கப்பட்டு, ஒரே கொள்கை, ஒரே வித கோஷங்களால் முஸ்லிம் லீகும், ஹிந்து மஹா சபையும், இந்தியாவின் இரண்டு பெரிய சமூகங்களுக்கு, ஆத்திர மூட்டி வந்திருப்பதை பார்க்கலாம். ஆகஸ்ட் 15-ல் நாடு இரண்டாகப் பிரிந்ததற்கு இவ்விரு ஸ்தாபனங்களும் வளர்த்த வேற்றுமையே காரணம். பிரிவினைக்குப்பிறகு லீக் வகுப்பு வாதிகளின் பிடியில் பாகிஸ்தான் அகப்பட்டுக்கொண்டது. அவர்கள் அங்கு செய்த அடாச்செயல்களையும் அட்டகாசத்தையும் வருங்கால சரித்திரம் அலட்சியம் செய்யப்போவதில்லை.

பாகிஸ்தானைப்போல் இந்தியா வகுப்புவாதிகள் பிடியில் அகப்பட்டுக்கொள்ளவில்லை. அறுபது வருஷங்களாக ஜனநாயக அடிப்படையில் விடுதலைக்காகப் போராடி வந்திருக்கும், இந்தியர் அனைவருக்கும் பிரதிநிதித்வம் வாய்ந்த காங்கிரஸ் மஹா சபையிடமே ஒப்படைக்கப்பட்டது.

இந்திய டொமினியன் முஸ்லிம்கள் வகுப்புவாத போக்கின் விளைவுகளை நன்றாய் உணர்ந்துவிட்டனர். டிஸம்பர் 26, 27 தேதிகளில் லக்னோவில் கூடி வகுப்பு வாதத்திற்கு தலை முழுக்கும் போட்டு ஆயிற்று. முஸ்லிம் பொதுமக்கள் லீகை விரட்டிவிட்டார்கள். சில பணமூட்டைகளின் பங்களாக்களில் ஒடிப்போய் தஞ்சம் அடைந்திருக்கிறது. அந்தப் பெரிய மனிதர்களும்கூட ஏதோ தப்பித் தவறி தங்கள் எஜமானர் மிஸ்டர் ஜின்னாவை நினைத்துக்கொள்ளும்போது நன்றி அறிவிக்கும் தோரணையில் சோபையிழந்த அரை குறை அறிக்கைகள் விடுவதைத் தவிர முஸ்லிம் லீக் மாண்டு மடிந்து மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்டது.

பிரிவினைக்கு வகுப்பு வாதமே காரணம். அதனால் ஏற்பட்ட நாசகரமான விளைவுகளுக்கெல்லாம் வகுப்பு வாதிகளே பொறுப்பு. எனினும் இன்று பிரிவினையையும் அதன் விளைவுகளையும் உபயோகித்துக்கொண்டு தேசிய ஜனநாயக வாதிகளை பின்னுக்குத் தள்ளி வகுப்பு வாதிகள் முன்னுக்கு வரும் முயற்சிகள் நடக்கின்றன. 'ஹிந்து ராஜ்யம்' என்ற கோஷத்தின் திரை மறைவில் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சிகளில் முனைந்திருக்கின்றனர். ஹிந்து மஹா சபை மாஜி தலைவர் டாக்டர் சியாம பிரசாத் முக்கர்ஜி டொமினியன் சர்க்காரில் இடம் பெற்றிருப்பதை அவர்கள் தவறாக எடுத்துக்கொண்டனர். எல்லோரையும் அணைத்து, ஆதரித்துக்கொண்டுபோகும் உயரியபோக்கைப்பார்த்து சர்க்கார் தங்களுக்கு சாதகமாய் இருப்பதாக அவர்கள் எண்ணிவிட்டனர். தங்கள் கனவு நனவாகிவிடமுடியும் என்று நம்பி சிவில் ராணுவ இலாகாக்களில் பொறுப்பு வாய்ந்த சிலருக்கும் துவேஷப் பிரசாரத்தை ஊட்டினர் மஹா சபையும் அதன் அரைகுறை ராணுவ தோரணையுள்ள சேவக் சங்கமும் நிரபராதிகளின் ரத்தத்தால் வளர்ந்து வந்தது. முடிவில் அவர்களைச் சேர்ந்த ஒருவனால், ஒடுக்கப்பட்ட மக்களின் ரக்ஷகர் இந்தியாவின் தந்தை ஜனவரி 30-ல் கொல்லப்பட்டார்.

இன்னும் எத்தனை வருஷங்கள்தான் வாழ்ந்திருந்தாலும் அண்ணல் மகாத்மா காந்தி இவ்வுலகத்தை விட்டு ஒரு நாள் மறைவது என்னவோ நிச்சயம். அதைக்குறித்துக் கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பது மட்டும் நம் கடமையல்ல.

மகாத்மாவின் மறைவால் 24-மணி நேரத்திற்குள் தேசம் பூராவிலும் சண்டமாருதம் ஒன்று அடிக்க ஆரம்பித்தது. தேசிய மனப்பான்மையுள்ள ஹிந்து, சீக்கியர்கள் மஹா சபைக்காரர்களுடன் மோதினர். சேவக் சங்கத்தை சர்க்கார் சட்ட விரோதமானது என்று அறிவித்து நாட்டில் பல்வேறு பாகங்களில் மகாசபை, சேவக் சங்கத்தினரை கைது செய்தனர்.

நெருக்கடியான இந்நிலையில் மஹாசபைபிரபலஸ்தர்கள் டாக்டர் சியாமபிரசாத் முக்கர்ஜியின் வீட்டில் கூடி இரண்டு நாட்கள் வரை மஹா சபையின் எதிர் காலத்தைக் குறித்து விவாதித்தனர். முடிவில் அகில இந்திய ஹிந்து மஹா சபையின் மாஜி தலைவரும், இந்திய சர்க்கார் தொழில், சப்ளை இலாகா மந்திரியுமான டாக்டர் முக்கர்ஜி மஹா சபையின் எதிர் காலத்தைக்குறித்து தன் கருத்தை ஒரு அறிக்கையில் வெளியிட்டார். அதில் அவர்

"இன்றுள்ள நிலைமையில் மஹாசபைக்கு இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. மஹாசபை அரசியல் நடவடிக்கைகளைவிட்டு சமாஜ, கலாசார, மத விஷயங்களில் கவனம் செலுத்தவேண்டும். எந்த அரசியல் கட்சியில் சேருவதென்பது மெம்பர்களின் முடிவுக்கே விடப்படவேண்டும்.

"இரண்டாவதாக மஹாசபை தன் வகுப்பு வாதக் கொள்கையை மாற்றிக்கொண்டு அதன் அரசியல் பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொள் ளக்கூடிய சகல மதத்தினரும் அதில் சேர சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். மாறுதல் அடைந்துள்ள இன்றைய நிலைமையில் எது உசிதம் என்று தீர்மானிப்பது மஹா சபையின் வேலை" என்று கூறியுள்ளார்.

ஆகஸ்ட் 15-ந்திற்குப் பிறகு டாக்டர் முக்கர்ஜி இருந்துவரும் சூழ்நிலையில் பெரும்மாறுதல் அடைந் திருப்பார் என்று நாம் நம்பினோம்.

"இன்றைய சூழ்நிலையில் எவ்வகையிலும் முஸ்லிம் லீக் நீடிப்பது சமுதாயத்திற்கும், தேசத் திற்கும் தீமையே விளைவிக்கும்"

என்று இந்திய சர்க்கார் கல்வி மந்திரி மௌலானா அபுல்கலாம் ஆஸாத் லக்னோவில் லீக் லீடர்களுக்கும் முஸ்லிம் பொதுமக்களுக்கும் கூறிய யோஜனையைப் போலவே டாக்டர் முக்கர்ஜியும் தன் சமூகத்தின ருக்கு "இன்றைய சூழ் நிலையில் எவ்வகையிலும் ஹிந்து மஹாசபை நீடிப்பது சமுதாயத்துக்கும் தேசத்துக்கும் தீமையே விளைவிக்கும்" என்று சிறந்த யோஜனை கூறுவார் என்று எண்ணினோம். டாக்டர் முக்காஜி அவர்கள் வகித்துவரும் பதவியை உத்தே சித்து மௌலானா ஆஸாதைப்போலவே அவரும் நடந்துகொள்ளவேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது தவறல்ல.

புலியின் பட்டைகளை மறைப்பதைப்போல் சில மாறுதல்களுடன் முஸ்லிம் லீக் நீடிக்கவேண்டும் என்று சொல்லும் லீக் லீடர்களைப்போலவே டாக்டர் முக்கர்ஜியும் சொல்லுவது வருந்தத்தக்கதாகும். ஹிந்துமஹாசபையை உடனடியாக கலைத்துவிட யோசனை கூறும்படி டாக்டர் சியாமபிரசாத் முக்கர்ஜி அவர்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

"ஆஸாத்"
(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.)

உங்கள் ஊரில் ஏஜண்டிடம் கேளுங்கள். உங்கள் ஊரில் "ஆஸாத்" ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுக்கும்படி அவருக்கு யோசனை கூறுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை, "ஆஸாத்" சந்தா தாரர்களாக ரூ 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மேனேஜர்
"ஆஸாத்"

### பரேல்லியில் ஓர் முஸ்லிம் மாது
### பாபூஜி மறைவு கேட்டதும் மறைந்தார்.

பரேல்லி,
4—2—48.

சார்ஷா மசூதிக்குப் பக்கத்தில் ஒரு முஸ்லிம் மாது கீரை அறுத்துக்கொண்டிருந்தாள் மகாத்மாஜி யின் மறைவுக்கு அனுதாப ஊர்வலம் அவ்வழியே சென்றது மகாத்மா காந்திஜி வீரசொர்க்கம் அடைந்த செய்தி கீரை அறுத்துக்கொண்டிருந்த அந்த ஏழை முஸ்லிம் மாதுக்கு அறிவிக்கப்பட்ட வுடன் 'ஐயோ!" என்று அலறி பிணமாய் சாய்ந்தாள். இந்த ஏழை அம்மையாரின் சவ அடக்கத்தில் ஏராள மான மக்கள் கலந்துகொண்டனர்.

---

### மகாத்மா மறைவால் மனமாறுதல்.
### இனி மது அருந்தமாட்டேன்.

லாகூர்,
3—2—48.

பாபூஜி நினைவை கௌரவிக்கும் தோரணையில் பெரிய குடிகாரன் ஒருவன் இனி குடிப்பதில்லை என்று சபதஞ்செய்து திருந்தினான். லாகூர் நவநாக ரீக ஹோட்டல் முதலாளி பத்திரிகை நிருபர்களிடம் ஒரு கிளாஸ் தண்ணீர் அருந்திக்கொண்டே பின் வருமாறு கூறினர்:—

"பலவருஷங்களாக நான் சாராயம் குடித்து வருகிறேன். குடியில் எனக்கு அதிகப் பழக்கம் உண்டு. ஆனால் மகாத்மாஜியின் ஞாபகார்த்தமாக இனி என்னுடைய தொண்டையை சாராயத்தால் நனைப்பதில்லை என்று உறுதி கொள்கிறேன். மதுவை இனி கையாலும் தொடமாட்டேன் என்று சத்தியம் செய்கிறேன்"

கணவன் திருந்திய சந்தோஷத்தில் மனைவி தன் சிநேகிதிகளுக்கு தேனீர் விருந்தளித்தாள்.

—:O:—

### ஹகாயிக்குல் இஸ்லாம் சங்கம்.

கல்லிடைக்குறிச்சி
8—2—48.

சங்கத்தின் ஜெனரல்பாடி கூட்டம் ஜனாப் E.V.K. மீறான் சாஹிப் தலைமையில் கூடிற்று. அண்ணல் மஹாத்மாஜீயின் மறைவு குறித்து அனுதாபத்தை தெரிவித்தும் அன்னாரின் தியாகத்தையும் ஒழுக்கம் நிறைந்த குணாதிசயங்களைப் பாராட்டியும் மஹாத்மாவின் மறைவு குறிப்பாக இந்தியாவுக்கும் பொதுவாக உலகத்துக்கும் ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டம் என்றும் ஜனாப்கள், A. முஹம்மது சாஹிப், P. P. மீறான், M.M. மன்னான், K. M. முஹையத்தீன்பிச்சைமுதலியோர்சொற்பொழிவுகள் நிகழ்த்திய பிறகு மவுனமாக எழுந்து நின்று உத்தமரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தனை செய்யப்பட்டது. அனுதாபத்தை தெரிவித்து தலைவர் K. M. ஷேக்பீர் முஹம்மது அவர்களால் பண்டித நேருவுக்கு தந்தி அனுப்பபட்டது.

K. M ஷேக்பீர் முஹம்மது.

# புனித பாகிஸ்தானில்?

[டில்லியிலிருந்து புறப்பட்ட அகதி பஸ் ஒன்றின் இரண்டாவது சீட்டில் ஐக்கியமாகாணத்தைச் சேர்ந்த ஒரு கான் சாகிப், தன் மனைவி மகளுடன் உட்கார்ந்திருக்கிறார். எல்லையைக்கடந்து பஸ் பாகிஸ்தானில் பிரவேசிக்கிறது அகதிகள் அனைவரும் "பாகிஸ்தான், பாகிஸ்தான்" என்று ஆரவாரம் செய்கின்றனர்.]

**பேகம் சாகிபா:-** (கான் சாகிப் மனைவி):- அரே அல்லாஹ்! தோபா ஷுகுர்!

**கான் சாகிப்:-** நாமே பாக்யசாலிகள். இஸ்லாமிய ஆட்சியில் இனி அமைதியாக வாழ்வோம் பாகிஸ்தான் புனிதபூமியே!உனக்காக நாம் ரத்தம் சிந்தினேம்.

**பேகம் சாகிபா:-** கடைசி ஆசையும் தீர்ந்தது. இனி நான் செத்தாலும் அதைப்பற்றி அக்கரையில்லை. புனித பூமியில் என்னை அடக்கம் செய்தாலே போதும்.

**அன்வரி:-** (கான் சாகிப் மகள்):- அம்மா! அந்த பாலத்திற்கு இந்தப் பக்கத்திலிருப்பதுதான் பாகிஸ்தானா?

**பேகம்சாகிபா:-** ஆமாண்டி, கண்ணு. இது தான் பாகிஸ்தான். ஆஹா! என்ன குதூகலம்! பாகிஸ்தான் காற்றுப்பட்ட மாத்திரத்திலேயே எத்தனை சந்தோஷம்! உனக்கும் சந்தோஷமாக இல்லையாடி, கண்ணு?

**அன்வரி :-** இங்கே இருக்கிற பூமி, மரங்கள், ஆகாயம், சூரியன், எல்லாம் அங்கே இருந்ததைப் போலத்தானே அம்மா இருக்கிறது! பாகிஸ்தானுக்கும் ஹிந்துஸ்தானுக்கும் என்ன வித்தியாசம்?

**கான்சாகிப் :-** அடி உலக்கைக் கொழுந்தே! பாகிஸ்தான், ஹிந்துஸ்தானென்றால் ஆகாயத்திலும் பூமியிலுமா வித்தியாசம் இருக்கும்! பைத்தியமே! இரண்டு நாடுகளிலும் வசிக்கும் மனிதர்களிடையே தான் வித்தியாசம்.

**பேகம்சாகிபா :-** ஓஹோ! பாகிஸ்தானிலுமா தொல்லை! பஸ்ஸை நிறுத்தி, நிறுத்தி நம்பரைக்குறிப்பதும், சுங்கவரி கேட்டிலே காத்துக்கொண்டிருப்பதும், அப்பப்பா! போதும்!

**அன்வரி :-** பாகிஸ்தானிகளுக்கும், ஹிந்துஸ்தானிகளுக்கும் என்னப்பா வித்தியாசம்?

**கான்சாகிப் :-** அன்வரி! ஹிந்துஸ்தான் காபிர்களுடைய நாடு. அங்குள்ளவர்கள் சுத்த மோசம். அங்கு குறும்புத்தனம் அதர்மம், கள்குடி, திருட்டு, கொலை, கொள்ளை எல்லாம் மலிந்திருந்தது. ஆனால் பாகிஸ்தான் அப்படியல்ல. ஆண்டவனின் உண்மையான பக்தர்கள் இங்கே வசிக்கின்றனர். முதலில் இவர்களும், அப்படித்தான் இருந்தவர்கள். பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு இங்குள்ளவர்கள் அறவே மாறிவிட்டார்கள். சதா ஆண்டவனை வணங்குவதும், ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கையை நடத்துவதுமாய் இப்பொழுது இருக்கின்றார்கள்.

**பேகம் :-** அன்வரி, நபிநாயகத்தின் ஜீவிய சரித்திரத்தை நீ படித்திருக்கிறாயல்லவா?

**அன்வரி :-** ஆஹா! பேஷாய் படித்திருக்கிறேன். நபிநாயகமும், அவர்களுடைய சகாக்களும், ஜனங்களுக்கு தொண்டர்களாகவும் கடவுளின் பக்தர்களாகவும் இருந்தார்கள். மக்கா வாசிகள் அவர்களுக்கு துன்பம் விளைவித்தார்கள். அதனால் அவர்கள் மக்காவைவிட்டு மதினாவுக்குப் போய் அங்கே பரிசுத்த வாழ்க்கை நடத்த முடிந்தது.

**பேகம் :-** ஷாபாஷ்! ஒரே தடவையில் அந்த புஸ்தகம் மனப்பாடமாய்ப் போச்சே! மதினாவில் நபிநாயகம் அவர்கள் நடத்திய பரிசுத்த வாழ்க்கை நடத்துவதற்காகத் தானே பாகிஸ்தான் வாங்கப்பட்டிருக்கிறது. மக்காவிலிருந்து கஷ்டப்பட்டு மதினாவுக்கு அன்று போனார்கள். அதைப்போலவே நாமும் துன்பங்களை அனுபவித்து பாகிஸ்தான் வந்து சேர்ந்திருக்கிறோம்.

**அன்வரி :-** எனக்கு இப்பொழுது புரிந்துவிட்டது. அம்மா! நாம் "ஹிஜரத்" செய்துவந்திருக்கிறோம்!

**கான்சாகிப் :-** ஷாபாஷ், ஷாபாஷ், சமத்தல்ல! சின்ன வயசிலே எத்தனை பெரியவிஷயங்கள் தெரிந்திருக்கிறது பார்த்தாயா, பீபீ!

**பேகம் :-** திரும்ப என்ன இழவு இந்த மோட்டாருக்கு? 'கர், கர்ரு"ன்னு கத்த ஆரம்பித்திருக்கிறது. நாம் லாகூர் எப்பொழுது போய் சேருவோம்?

**அன்வரி :-** பாகிஸ்தானில் இன்னும் என்ன இருக்கிறதப்பா?

**கான்சாகிப் :-** இங்கே யாரும் பொய் சொல்ல மாட்டார்கள். மோசடி, கொலை, கொள்ளை, சண்டை, சச்சரவு இருக்காது. கள், சாராயம் இல்லை. இங்குள்ளவர்கள் அனைவரும் பரிசுத்த வாழ்க்கையை நடத்துகின்றனர்.

**பேகம் :-** மேரா அல்லா! தோபாஷுகுர்!
(பத்திரிகை விற்கும் பையன் குரல் கேட்கிறது)

''ஜெயிலிலிருந்து விடுபட்ட சீக்கியர்கள் கொலை இன்றைய செய்திகள். அரையணா.''

**அன்வரி:-** அப்பா! என்ன அது?

**கான்சாகிப்:-** எது?

**அன்வரி:-** பாகிஸ்தானிலும் கொலையா!

**பேகம்;-** பழிக்குப் பழி? இந்த செய்திகளைக் கேட்டாலே எனக்கு மயிர்க்கூச்சல் எடுக்கிறது.

**கான்சாகிப்:-** இதெல்லாம் பாகிஸ்தான் எதிரிகளின் செய்கையாக இருக்கலாம்.

(ஜனங்கள் பெருங் கூட்டமாக கூடியிருக்கும் ஒரு சாராயக்கடையை தாண்டி பஸ் போகின்றது)

**அன்வரி:-** அப்பா! அப்பா! அதோ பாருங்கள். பாகிஸ்தானில் சாராயக்கடையா! குடிகாரர்களின் இவ்வளவு பெரியகூட்டமா! என்னப்பா இது, அநியாயமாக இருக்குதே!

**கான்சாகிப்:-** எங்கே?

**அன்வரி:-** அதைத் தாண்டி வந்துவிட்டோம் அப்பா.

**கான்சாகிப்:-** ஹூம்.

**பேகம்:-** பழய சாராயக்கடை போர்டுகள் இன்னும் எடுக்கவில்லை போல் இருக்கிறது.

(மால்ரோடு வழியாக பஸ் போய்க்கொண்டு இருக்கிறது.)

**பேகம்:-** அட, வெட்கக்கேடே! இதென்ன பெண்களா, பேய்களா? தலையிலே துணி இல்லை, மார்பிலே தாவணி இல்லை. குலுக்கு நடை என்ன வேண்டியிருக்கு ஹிந்துப் பெண்கள் இன்னும் பாகிஸ்தானை விட்டு வெளியேறலே போலிருக்கு.

**டிரைவர்:-** பீபீ! இவர்கள் எல்லாம் ஹிந்துப் பெண்களல்ல. இங்கு யாரும் ஹிந்துக்களில்லை. முஸல்மான்கள் பெற்றுவளர்த்த முஸ்லிம் பெண்கள் தான்.

**கான்சாகிப்:-** என்ன அது! முஸ்லிம் பெண்களா? அட அனுசாரமே!

**பேகம்:-** ஆனால் பாகிஸ்தான்...................?

**டிரைவர்.-** கிழக்கு பஞ்சாப், டில்லி ஐக்கிய மாகாணம் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் ஓடி வந்திருக்கும் ஏராளமான தாஸிகளின்..................!

**அன்வரி:-** அம்மா! அதோ அரை நிர்வாணப்பெண்களின் பெரிய, பெரிய படங்கள்! பாடுகிற சப்தமும் கேட்கிறதே?

**கான்சாகிப்:-** (எட்டிப்பார்த்து) அதுவா! சினிமா கொட்டகை போலிருக்கு.

**பேகம்:-** சினிமாக்கொட்டகையா? நிர்வாணப் படங்களா? பாகிஸ்தானிலா? அரே மேரே அல்லாஹ்! கண்களை நம்ப முடியவில்லையே.

**கான்சாகிப்:-** (பெருமூச்சு விடுகிறார்) டிரைவர் இங்கே தாஸிகளுமா இருக்கிறார்கள்?

**டிரைவர்:-** சாராயக் கடைகள் இருக்கும் பொழுது தாஸிகளும் அவசியந்தானே? உங்கள் புண்ணியத்தில் பாகிஸ்தானில் அதெல்லாம் குறைவில்லை. தாஸிகளுக்கெல்லாம் வரி விதித்து அந்தப் பணத்தை காய்தே ஆஜம் நிதியில் சேர்க்கப்போவதாக ஒரு வதந்தியுமிருக்கிறது.

**கான்சாகிப்;-** அட கண்றாவிப் பிழைப்பே! இதென்ன பாகிஸ்தானா? தாஸிஸ்தானா?

(மால் ரோடில் போலீஸ்காரன் பஸ்ஸை நிருத்துகிறான் வேகமாகஓடிக்கொண்டிருந்த பஸ்கொஞ்சதூரம் சென்று நிற்கிறது டிரைவர் இறங்கிப் போகிறான். வெகுநேரம்வரை கெஞ்சிக்கூத்தாடி போலீஸ்காரனுக்கு ஏதோ கொடுத்துவிட்டு திரும்பி வந்து பஸ்ஸை எடுக்கிறான்.)

**டிரைவர்:-** இரண்டு ரூபாய்க்கு சனியன்பிடித்தது.

**கான்சாகிப்:-** என்ன, லஞ்சமா! கான்ஸ்டேபிள் வாங்கினானா?

**டிரைவர்:-** வாங்காமல் அவர்களா விடுவார்கள்?

**கான்சாகிப்:-** அவன் ஹிந்துவா, முஸ்லிமா? பாகிஸ்தான் போலீஸ்படையைச்சேர்ந்தவன்தானே?

**டிரைவர்:-** பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்டதால் போலீஸூம் ''பாக்'' (பரிசுத்தம்) ஆகிவிட்டது என்று அர்த்தமா?

**கான்சாகிப்:-** அப்படியென்றால் இங்கேயும் லஞ்ச ஊழலா? அட தெய்வமே!

**டிரைவர்:-** கான்சாகிப்! எந்த உலகத்திலே இருக்கிறீர்கள்? பாகிஸ்தான் ஏற்படுவதற்குமுன்னால் எவ்வளவோ பரவாயில்லை, இப்பொழுதுள்ள அக்ரமத்திலிருந்து ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும். போகப்போக உங்களுக்கே தெரியும். ரேஷன் கடைக்குப்போனால் லஞ்சம், ஒரு வீடோ, கடையோ வாட

கைக்கு அமர்த்த வேண்டுமென்றால் லஞ்சம், ரயில் டிக்கெட்டு வாங்க லஞ்சம், குனிந்தால் லஞ்சம் நிமிர்ந்தால் லஞ்சம். "பாகிஸ்தான் ஜகாத்" (லஞ்சம்) கொடுக்காமல் இஸ்லாமியராஜ்யத்தில் யாரும் இருக்க முடியாது, கான்சாகிப்!

**கான்சாகிப் :-** ஹிந்துஸ்தான் எவ்வளவோ பரவாயில்லை போலிருக்கே;

**டிரைவர் :-** சந்தேகமென்ன! நாங்களும் விடுகிறோமா என்ன; எல்லாவற்றையும் சேர்த்து ஈடு செய்துகொள்கிறோம்.

**கான்சாகிப் :-** அது எப்படி?

**டிரைவர் :-** கிழக்கு பஞ்சாபுக்கு அகதிகளைக் கொண்டு போகும்போது அவர்களிடம் கிடைக்கிற வரையில் சுருட்டுவதுதான். டிரக்கிலே நாலுபேரை அதிகமாக அடைத்தால் நாலு மாதங்களுக்கு சில வாச்சு.

**பேகம் :-** அட அல்லாவே! எல்லாவற்றையும் இழந்து, ஓடும் அகதிகளிடம் கூடவா இந்த அக்கிரமம்.

**டிரைவர் :-** பீபீ! இந்த தத்துவங்களெல்லாம் ஹிந்துஸ்தானோடு இருக்கட்டும். வாங்கவில்லை என்றால் கொடுப்பதற்கு நாம் என்ன மூட்டையாகட்டி வைத்திருக்கிறோம்?

**பேகம் :-** பாகிஸ்தான் நிலைமை படு மோசமா இருக்கே!

**கான்சாகிப் :-** இங்கு 'இஸ்லாம்' இருக்கிறதா என்று கூட சந்தேகிக்கவேண்டி யிருக்கிறது.

(மால் ரோடைத் தாண்டி பஸ் 'நாப்' ரோடில் நிற்கின்றது. ஜனங்களுடன், கான்சாகிபும் இறங்குகிறார். டாங்காகாரனைப் பார்த்து)

**கான்சாகிப் :-** சௌர்பஜி குவார்டருக்கு என்னப்பா வாடகை?

**டாங்காகாரன் :-** ரொம்ப தூரமாச்சுங்களே; டாங்காக்கள் அதிகமாக அங்கு போரதில்லிங்க. இருந்தாலும் நீங்க அகதிபோலிருக்கு. அஞ்சு ரூபா கொடுங்க.

**கான்சாகிப் :-** என்ன ஐந்து ரூபாயா?

**பேகம் :-** இது டாங்காவா! டாக்ஸியா?

**டாங்காகாரன் :-** அகதின்னு நியாயமா கேட்டேனுங்க. வேறு டாங்காகாரன்னா பத்து ரூபா கேப்பாங்க. போக்கு வரத்து அதிகம் பாருங்க.

(வழிப்போக்கர் ஒருவர் நின்று)

**வழிப்போக்கன் :-** என்னப்பா! சௌபர்ஜி குவார்டருக்கு ஐந்து ரூபாயா? இதோ முன்னால் இருப்பது தானேப்பா சௌபர்ஜி குவார்ட்டர்.

**டாங்காகாரன் :-** அவர்களுக்கு தனி டாங்கா வேணுங்களாம்.

**வழிப்போக்கன் :-** இருந்தால்? நாலணா கொடுக்கலாம். அதிகமாக கொடுத்தால் ஆறணா கொடுக்கலாம். அகதி என்று ஜேப்படிக்கப் பார்க்கிறயே அப்பா.

**டாங்காகாரன் :-** ஆரணா டாங்கா வந்தா ஏறிகிட்டு போங்க.

**வழிப்போக்கன் :-** கான்சாகிப்! சற்று காத்திருங்கள். வேறு டாங்கா வரும் ஏறிப்போகலாம். இந்தப்பாவிகள் உடுப்பையும் உருவிக் கொள்ளுவார்கள்.

**கான்சாகிப் :-** நண்பரே! அதிருக்கட்டும். இன்றைக்கும் இந்த மோசடிகள், பித்தலாட்டங்கள் பாகிஸ்தானில் நடக்கின்றதா?

**வழிப்போக்கன் :-** எல்லாம் நடந்துகொண்டு தானிருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்த பிறகும் திருடனுக்கு தேள் கொட்டினாற்போல் வாயைமூடிக் கொண்டுதானிருக்கவேண்டும்.

**கான்சாகிப் :-** வாயைமூடிக்கொண்டிருப்பதா? "லேகே ரஹேங்கே பாகிஸ்தான்" என்று கோஷித்தது, வாயை மூடிக்கொண்டிருப்பதற்கா; பாகிஸ்தான் என்றால் 'லா இலாஹ இல்லல்லாஹ்" என்று முழுங்கியதும் உலகத்தை ஏமாற்றுவதற்கா? பரம்பரையாக வாழ்ந்து வந்த வீடு, வாசல்களை இழந்து, துன்பங்களை சகித்து ஓடிவந்தது இந்த அநியாயத்தைப் பார்க்கத்தானா?


# தமிழ்ப் பாதுகாப்பு.

மக்கள் பல்கலைக் கலா நிலையத்தில் நிதர்சனக் கல்வி சொற்பொழிவாளராகிய ஸ்ரீ எம். வி. சர்மா அவர்கள் தமிழ்கலை, கல்வி, பண்பு, பொருள்கள் ஆகிய இவைகளைப்பற்றி ஒளி நிழல் படங்களை (மாஜிக் லாண்டர்ன்) ஜாலக் கண்ணாடி உதவிகொண்டு பெரிதாகத்திரையில் காட்டி சொற்பொழிவாற்றுகிறார்கள். சங்கங்கள் சொற்பொழிவாற்ற அவரைக்கண்டு பேசி தீர்மானித்துக்கொள்ளலாம்.

விலாசம்.—

**எம். வி. சர்மா,**
5, கல்யாணராமன் தெரு,
**திருக்குடந்தை.**

# மஹாசபை சேவா சங்க துஷ்பிரசார விளைவு

## பாபூஜி கொலை பற்றி கோவிந்த சஹாய்.

லக்னோ, 2—2—48.

மகாத்மாஜியின் கொலையைக் குறித்து ஐக்கியமாகாண சர்க்கார் பார்லிமெண்டரி காரியதரிசி மிஸ்டர் கோவிந்த சஹாய் பின்வரும் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

சமுதாயத்தின் அருமைத் தந்தையை கொலை செய்த கோட்ஸே ராஷ்டிரிய சேவா சங்கத்தைச் சேர்ந்தவனா அல்லது மஹாசபையைச் சேர்ந்தவனா என்று தெரிந்து கொள்வதால்பிரயோஜனமில்லை இச்சம்பவம் தனி நபரால் அகஸ்மாத்தாக நடந்ததல்ல. கட்டுப்பாட்டுடன் திட்டபடி நடந்த சதி என்பதை இன்று மக்கள் பூரணமாக உணர வேண்டியது. அவசியம்.

இவ்விரண்டு ஸ்தாபனங்களுக்கும் (சேவாசங்கம் மஹாசபை) சிறிது காலமாகவே செய்து வந்திருக்கும் காங்கிரஸுக்கு எதிரான வெறுப்பு, கேவலம் நிறைந்த பிரசாரத்தின் பலனே இச்சம்பவம். பர்மாவில் ஆங்ஸானுக்கு செய்ததையே இந்தியாவில் காங்கிரஸ் தலைவர்களுக்கும் செய்யுங்கள் என்று கடந்த சில மாதங்களில் பகிரங்கமாக கூட்டங்களில் பேசப்பட்டு வந்தது.

குழந்தைகள், வாலிபர்கள், கிழவர்கள் அகதிகளுக்கு வெகு தந்திரமாக காங்கிரஸ் தலைவர்களுக்கெதிராக வெறுப்பூட்டப்பட்டு வந்தது. சகல விதத்திலும் பொறுமை ஊட்டும் பொய்யான விஷயங்கள் பிரசாரம் செய்யப்பட்டன. காங்கிரஸுக்கு எதிரான முன்னணியில் மக்களை திரட்ட இன்றைய கஷ்டங்களும், ஓய்ந்திருந்த வகுப்பு வாதமும் உபயோகிக்கப்பட்டது.

ஏழை மக்களின் நம்பிக்கைக்கும், அபிலாஷைக்கும் பாத்திரமான மகாத்மாஜியை ஹிந்து ராஜ்யத்தின் பரமசத்ரு என்று பிரசாரம் செய்யப்பட்டது இவ்வித எண்ணத்தை ஈவிரக்கமின்றி ஹிந்து வாலிபர்களின் இரத்தத்திலே புகுத்த முயற்சிகள் நடந்தன. அது மட்டுமல்ல. சங்கத்தினிடம் பூரண விசுவாசமுள்ள பொறுக்கி எடுத்த சில மெம்பர்கள் ''தற்கொலை படை'' ஒன்றை அமைத்து பாபூஜியின் உருவத்தை அழிக்க ஒழுக்கக்கேடான காரியங்களில் ஈடு பட்டிருந்தனர்.

பாபூஜியின் திரு உருவப்படத்தை தங்கள் பூட்ஸுகளில் வைத்திருந்த சில மாணவர்கள் நம் மாகாணத்திலும் கண்டுபிடிக்கப்பட்டனர். இவ்வித போதனைகளால் ஏற்படும் மனப்பான்மை நிச்சயமாக கத்தி, கட்டாரியிலேதான் வெளியாகும். நேற்று சமுதாயம் சோகக்கடலில் மூழ்கியிருந்த சமயத்தில் சில காங்கிரஸ்காரர்கள் பிரதேச ராஷ்டிரிய சேவா சங்க அணிவகுப்பை ஒருநாளுக்காக நிறுத்திவைக்கும்படி வேண்டினர் "இன்னும் பலபேர்களின் சோகம் கொண்டாட வேண்டியது பாக்கியிருக்கையில் அதற்குள் பொறுமை இழந்து விட்டீர்களே" என்று பதில் கிடைத்தது.

சுதந்திர விரோதிகளை சரிவர உணர்ந்து கொண்டு தங்கள் எதிர்காலத்தை மக்கள் நிர்ணயிக்க வேண்டிய கட்டம் வந்துவிடவில்லையா? இனியும் அப்படிச் செய்யவில்லையானால் ஜெர்மனியின் "நாஸி" சரித்திரம் இந்தியாவிலும் திருப்பி படிக்கப்படும். இவ்வித மனப்பான்மையின் விளைவுகள் அழிவு, நாசத்தின் ரூபத்திலேதான் வெளிப்படும். நம் விலைமதிக்க முடியாத செல்வம் 'காந்திஜியை' இழந்துவிட்டோம். சுதந்திரத்தையும் இழக்கவேண்டுமா?

# ஹிந்துக்களுக்காக பாகிஸ்தானிகள் உயிர்விட முடியுமா?

## ஜனாப் இஸ்மாயிலுக்கு அல்லா பிச்சை சவால்!

**மத்திய ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி அங்கத்தினர் (Union and Progress Committee) A M. அல்லா பிச்சை B. A., B. L., பத்திரிகைகளுக்கு கீழ்வருமாறு அறிக்கை விடுத்துள்ளார்.**

ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கம் சட்டவிரோதமாக்கப்பட்டுவிட்டது. நியாயமான இம்முடிவின் தன்மையை மறைமுகமாக உணர்ந்துஹிந்துமகாசபையும் தன்னுடைய தற்காலக் கொள்கையை மாற்றிக் கொள்ள தீவிரமாய் சிந்தித்து வருகிறது நாசகரமான வழியில் தவறாக இழுத்துச் செல்லப்படுவதிலிருந்து ஆயிரக்கணக்கில் நம் வாலிபர்கள் மீட்கப்பட்டதைக் குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். முஸ்லிம்களுக்கு எதிராக டில்லி, பீஹார், கிழக்கு பஞ்சாப்முதலிய இடங்களில் நடந்தவைகளுக்கெல்லாம் இச்சங்கமே பிரதான பொறுப்பாளி என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் பழிக்குப் பழியில் நம்பிக்கைக் கொண்டவனல்ல பாகிஸ்தான் முஸ்லிம்கள் தவறாக நடந்தால் அவமானம் என்றுமே அவர்களைச் சார்ந்திருக்கும். இந்திய முஸ்லிம்கள் அனைவரும் கொல்லப்பட்டாலுங் கூட தங்களிடமுள்ள ஹிந்து சகோதரர்களுக்கு நியாயம் வழங்குவதை பாகிஸ்தான் அரசாங்கம் தட்டிக்கழிப்பது சரியல்ல. அக்ரமக்காரர்களை ஆண்டவன் விரும்புவதில்லை.

# மிஸ்டர் ஜின்ஞ போகிருரா?

கராச்சி. 26-1-48.

"பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் மிஸ்டர்முஹம் மது அலி ஜின்ஞ டாக்டர்களின்யோஜனைக்கு இணங்க ஸ்விட்ஸர் லாந்தில் ஒரு மாதம் ஓய்வெடுத்துக் கொள்ளுவார் என்று தகவல் கிடைத்திருக்கிறது. சிறிது காலமாகவே திரேக அசௌக்கியத்தின் காரணமாக அவர் அதிகமான பேர்களுக்கு பேட்டியளிப்பதில்லையாம். அவர் இல்லாத சமயத்தில் தற்பொழுது கிழக்கு வங்க கவர்னராயிருக்கும் சர் பிரெடெரிக் போர்ன் பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் பதவி வகிப்பார் என்றும் தெரியவருகிறது."

ஓய்வெடுக்க யோஜனை கூறிய டாக்டர்கள் மிஸ்டர். ஜின்ஞவின் அரசியல் டாக்டர்களாக இருக்கலாம் என்று இங்குள்ளபலர் யூகிக்கிருர்கள். இன்று பாகிஸ்தானிலிருந்து வரும் குழப்பமான நிலைமையை உத்தேசித்து இந்த யூகம் சரியாகவும் இருக்கலாம். துருக்கியிலிருந்து அரபிய நாடுகளைப் பிரித்தபிறகு கர்னெல்-லாரென்ஸ் இங்கிலாந்திற்குச் சென்றுவிட்டதை இச்சந்தர்ப்பத்தில் சில நண்பர்கள் ஞாபக மூட்டுகின்றனர். பாகிஸ்தான் வாங்கியாய்விட்டதனல் இனி மிஸ்டர். ஜின்ஞவுக்கு அங்கு வேலையில்லையென்று அவர்கள் சொல்லுகின்றனர். மிஸ்டர். ஜின்ஞவுக்கு சரீர சம்பந்தமான சீக்கு இல்லை. மனோ வியாதி என்பது சிலருடைய அபிப்பிராயம். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் உயிரிழந்த லக்ஷக்கணக்கான ஆத்மாக்கள் அவரை பயமுறுத்திக்கொண்ருப்பதாகவும், அதற்காக பிராயச்சித்தம் செய்யாதவரையில் ஸ்விட்ஸர்லாந்துக்கு போவதால் பிரயோஜனமில்லை யென்றும் கர்மாவில் நம்பிக்கை கொண்ட சில அன்பர்கள் யோஜனை கூறுகின்றனர்.

எப்படியிருப்பினும் இச்செய்தியால் இங்குள்ள லீக் லீடர்கள் இடையே ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இத்தனை வருஷங்களாக 'ஜிந்தாபாத்' போட்டவர்களில் யாருக்காவது ஆக்டிங் சந்தர்ப்பம் கூட இல்லையா? என்று அவர்கள் சலிப்படைந்தால் அது நியாயமே யாகும். ஸர். பிரெடெரிக் போர்னைத் தவிர வேறு கருப்பர்கள்யாரும் தனக்கு பதில் வேலைபார்க்க முடியாது என்று மிஸ்டர். ஜின்ஞ நினைப்பாரானல் அதுவும் நியாயமே.

வெள்ளையர்களிடத்தில் மிஸ்டர் ஜின்ஞவுக்கு அலாதி பிரியம். இந்தியர்கள் ஆமோதிப்பதைவிட, வெள்ளையர்கள் நிராகரிப்பதில் அவருக்குத் திருப்தி. பீர்பூர் ரிபோர்ட் தயாரிக்கப்பட்டது. அதைக் குறித்து விசாரிக்க ராஜன்பாபு, மௌலான ஆஸாத், பண்டித நேரு முன் வந்தனர். மிஸ்டர் ஜின்ஞவுக்கு அது பிடிக்கவில்லை. வெள்ளையர்களிடம் ராயல் கமிஷன் கோரினர். நிராகரிக்கப்பட்டது. திருப்தியடைந்து பேசாமல் இருந்துவிட்டார். இன்று கிடைத்திருக்கும் பாகிஸ்தான் அடங்கிய திட்டத்தையே காந்தி-ஜின்ஞ பேச்சு வார்த்தையின்போது மகாத்மா சமர்ப்பித்தார். அன்று நிராகரித்த மிஸ்டர் ஜின்ஞ அதே திட்டம் வெள்ளையர்களால் சுமத்தப்பட்டவுடன் பேசாமல் சுமந்து கொண்டிருக்கிருர். அது அவருடைய தொன்று தொட்டு வழக்கம். இனி மேல் அது மாறுமா? மாற்றிக் கொள்ளத்தான் முடியுமா!

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி.)

முஸ்லிம்களுக்காக காந்திஜி உயிரிழந்தார். அங்கிருக்கும் ஹிந்துக்களுக்காக உயிர்விடத் தயாராய் இருப்பதாக பாகிஸ்தானில் உள்ள எந்த ஒரு முஸ்லிமாவது சொல்ல முடியுமா? இன்று முஸ்லிம்கள் பல விஷயங்களைக் குறித்து சிந்திக்க வேண்டும். வாழ்க்கையிலும்சரி, ஆத்ம தியாகத்திலும் சரி, மகாத்மாஜி தேசத்திற்கும், முஸ்லிம் சகோதரர்களுக்கும் சேவை செய்துள்ளார் சட்ட விரோதம் என்று அறிவிக்கப்படாமல் இருந்திருந்தால் இந்தியா பூராவிலும் பரவியுள்ள ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கம் தன்னுடைய நாசவேலைகளால் துரதிஷ்ட நாட்டை தீராத் துயரத்திலும், துன்பங்களிலும், அவமானத்திலும் ஆழ்த்தியிருக்கும். காங்கிரஸ் மகாசபை முஸ்லிம்களுக்காக மகாத்மாஜியை இழந்திருக்கிறது. வெறுப்பு, பலாத்காரம், கொலையில் நம்பிக்கை கொண்டிருக்கும் ஹிந்துக்களில் உள்ள ஒரு பிரிவினருக்கு, முஸ்லிம்களுக்காக காங்கிரஸ் சவால்விடுத்திருக்கிறது. இதை ஆழ்ந்து சிந்திக்கும்படி முகம்மது இஸ்மாயில் சாயபுவை நான் வேண்டுகிறேன். முஸ்லிம்கள் சேர்ந்து காங்கிரஸை பலப்படுத்தினல் இந்திய டொமினியன் நிதி, சமத்துவம், ஜனநாயக அடிப்படையில் மத அடிப்படையற்ற இன்ப நாடக பிரகாசிக்க முடியும் என்பது நிச்சயம்.

சென்ற வாரத் தொடர்ச்சி.

# —: புனர் வாழ்க்கை. :—

(o)

## ஐக்கியத்தால் நன்மைகள்.

1. நாலரை கோடி இந்திய முஸ்லிம்கள் அழிவதிலிருந்து தப்புவது சாத்தியம்.

2. இரண்டரை கோடி பாகிஸ்தான் ஹிந்து, சீக்கியர்கள் நசித்துவிடாமல் இருப்பது சாத்தியம்,

3. வீடிழந்து தவிக்கும் 125 லக்ஷம் மக்கள் திரும்பவும் தங்கள் வீடுகளுக்கு திரும்புவது சாத்தியம்.

4. ஹிந்துராஜ்யகோஷமும், ஹிந்துமஹாசபை, ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்க நடவடிக்கைகளும் ஒய்ந்துவிடும்.

5. சமஸ்தானங்கள் தில்லு மல்லுகளை விட்டு ஐக்கிய இந்தியாவுடன் சேர்ந்துவிடும்.

6. குடியேற்ற நாட்டந்தஸ்தை உடனே கைவிட்டு இந்தியா சுதந்திர குடியரசு பிரகடனம் செய்வதன் மூலம் பிரிட்டிஷ் சூழ்ச்சிகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

7. இந்தியா, ஆசிய நாடுகளுக்கு தலைமை வகிக்கமுடியும்.

8. ஐக்கிய இந்தியாவின் இயற்கை வசதிகளால் உற்பத்தியையும் வர்த்தகத்தையும் பெருக்க முடியும்

9. வெளியாரின் படையெடுப்பு ஆபத்திலிருந்து தப்பமுடியும்.

10. ஆயிரம் வருஷங்களில் உருவான இந்திய ஐக்கிய கலாச்சாரம், நாகரீகம் காப்பாற்றப்படுவதுடன் வளர்ச்சி அடையவும்முடியும்.

11. உருது பாஷை அழியாமல் இருப்பதுடன் முஸ்லிம்களின் புனிதஸ்தலங்களும், ஆட்சியின் ஞாபகச்சின்னங்களும் பத்திரமாக இருக்கமுடியும்.

12. மிரட்டிக்கொண்டிருக்கும் பாஸிஸ அபாயத்திலிருந்து இந்தியா தப்பமுடியும்.

13. எல்லாவற்றையும்விட இந்திய முஸல்மான்கள் விசுவாசப் பிரமாணம் செய்யவோ, அல்லது விசுவாசத்தை நிரூபித்துக்காட்டவோ அவசியம் இல்லாமல் போய்விடும்.

### பாஸிஸ்ட் பிடி தகர்ப்பதே லட்சியம்.

மீண்டும் ஐக்கியப்படுவதால் பாகிஸ்தானுக்கும் லாபமுண்டு. அன்பர்களுக்கு தப்பெண்ணம் ஏற்படாமல் இருப்பதற்காக நாம் நம்முடைய நிலையை விளக்கிவிட விரும்புகிறோம். பாகிஸ்தானிலுள்ள பொதுமக்களை எதிர்ப்பது நம் நோக்கமல்ல. அவர்கள் முன்னேற்றத்தில் நமக்கு பரிபூரண அக்கரையுண்டு. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர சாத்தியமான எல்லா துறைகளிலும் உழைக்க நாம் தயார். ஆனால் மதத்தின் பெயரைச் சொல்லி, மக்களை மயக்கி, தங்களுடைய பிடிவாதத்தைப் பூர்த்திசெய்து, நிர்வாகத்தை ஆக்ரமித்து, அழிவுத்துறையில் இழுத்துச் செல்லும், ஒரு கூட்டத்தின் பிடியிலிருந்து பாமர மக்களை விடுவிக்கவேண்டுமென்பதுதான் நம் லட்சியம். பாகிஸ்தான் பர்மா, இந்தோனேஷியாவைப் போல் இருந்தால் நாம் அந்த நாடுகளின் நன்மையை விரும்புவதைப்போலவே பாகிஸ்தானின் நன்மையிலும், நிச்சயமாக அக்கரைகொள்ளுவோம். இந்தியர்கள் நாற்பதுகோடி என்பதை நாம் அதற்குள் மறந்துவிடமுடியாது. இந்தியாவிலுள்ள 32 கோடி மக்களின் நன்மையை விரும்புவதைப்போலவே, பாகிஸ்தானிலுள்ள எட்டு கோடி இந்தியர்களின் நன்மையையும் விரும்புவது நம் கடமை. அவர்கள் துன்பப்படுவதைப்பார்த்து எவ்விதத்திலும் நாம் சந்தோஷப்படமுடியாது. மீண்டும் ஐக்கியப்படுவதால் பாகிஸ்தான் பொதுமக்கள் சுகமடைய முடியும். இந்திய ஐக்கியத்தால் கீழ்வரும் நன்மைகள் பாகிஸ்தானுக்கு ஏற்படும்.

1. ஏறக்குறைய ஐம்பதுகோடி ரூபாய் ராணுவச்சிலவு பாகிஸ்தானுக்கு மிஞ்சும். சிறு தொகை ஒன்று இந்திய சர்க்காருக்கு கொடுப்பதன்மூலம், இந்திய ராணுவமே பாகிஸ்தானை பாதுகாத்துக்கொள்ளும்.

2. பாகிஸ்தான் மத்தியஅரசாங்கச்சிலவு 25 அல்லது 30 கோடி ரூபாய் வருஷம் ஒன்றுக்கு மிச்சமாகும்.

3. 65 லட்சம் இந்திய அகதிகளை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பாகிஸ்தானுக்கு இல்லாமல் போய்விடும்.

4. உலகத்தின் ஏறக்குறைய முன்னூறு நாடுகளில் பாகிஸ்தான் தூதர்களின் காரியாலயங்களுக்காக ஏற்படக்கூடிய சிலவு 10 அல்லது 12 கோடி ரூபாய் வருஷம் ஒன்றுக்கு மிச்சமாகும்.

5. இந்திய நிலக்கரியையும், இரும்பையும் பெறுவதன் மூலம் பாகிஸ்தான் தன்னுடைய உற்பத்தியை பெருக்க முடியும்.

6. இந்திய மார்க்கெட்டில் தங்களுடைய உற்பத்தியை விற்பனை செய்ய சலுகை கிடைப்பதன்மூலம், பாகிஸ்தான் தொழிலாளரும், வியாபாரிகளும் முன்னேற்றமடைவது சாத்தியம்.

7. பாகிஸ்தானும், இந்தியாவும் சேர்ந்து வெளிநாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதில் அதிக சலுகைகள் பெறமுடியும்.

8. பாகிஸ்தான் மத்திய அரசாங்க சிலவு, அகதிகளுக்காக சிலவிடப்படும் தொகை, எல்லாவற்றையும் சேர்த்து பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காக சிலவிட சந்தர்ப்பம் உண்டாகும்.

### மஹத்தான எதிர்காலம்.

எனவே ஒரு கோடிக்குமேல் மக்கள் இன்றுள்ள பரிதாபகரமான நிலைமையிலிருந்து மீட்கப்படுவதற்கும், பாஸிஸ்டுகள் கையில் அகப்பட்டு அவதிப்படும் பாகிஸ்தான் இந்தியர்கள் விடுதலை பெறவும், இதைவிட சிறந்த பரிகாரம் வேறு எதுவும் இருக்கமுடியாது. ஏழு கோடி மக்களை காப்பாற்றுவதற்காக என்னதான் செய்தாலும் அது நியாயமேயாகும். இதைச் செய்தேயாகவேண்டும்.

ஐக்கியத்துக்குப் பிறகு இந்திய முஸல்மான்களின் அந்தஸ்து என்ன என்று கேட்கலாம். மிகவும் உயர்ந்த அந்தஸ்தை அவர்கள் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

1. பஞ்சாப், வங்காளம், எல்லைப்புரம், சிந்து, பலுசிஸ்தான் இந்த ஐந்து மாகாணங்களில் முஸ்லிம்கள் மெஜாரிடியிலிருப்பர். பிரிக்கப்பட்ட வங்காளமும், பஞ்சாபும் ஒன்று சேர்க்கப்படும். இவ்விரண்டு மாகாணங்களிலும் ஹிந்து, முஸ்லிம் சரிசமப் பிரதிநிதித்துவம் ஏற்படவேண்டும். பிரிந்த மாகாணங்கள் மீண்டும் ஏன் ஒன்று சேர்க்கப்பட வேண்டும் என்று சிலர் கேட்கலாம். பரஸ்பர நம்பிக்கை ஏற்பட்டு அவ்விரண்டு மாகாணங்களிலும் ஹிந்து, முஸ்லிம்களுக்கு சரிசமப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்ட பிறகும் மாகாணங்கள் ஒன்று சேருவது சரியல்ல என்று சொல்லுபவர்களின் பேச்சில் ஐக்கியம் த்வனிக்கவில்லை என்றே சொல்லமுடியும். மாகாண பொறுப்பாட்சி அடிப்படையில் இந்த ஐந்து மாகாணங்களிலும் முஸ்லிம்களின் ஆட்சியே இருந்துவரும். வெளிநாட்டு விவகாரம், போக்கு வரத்து, பாதுகாப்பு இம்மூன்றையும் தவிர மற்ற எல்லாத்துறைகளிலும் இன்று பாகிஸ்தானிலிருக்கும் சுதந்திரமே நீடிக்கும்.

2. இந்தியாவில் மீண்டும் பத்து கோடி முஸ்லிம்களின் ஐக்கிய சக்தி உருவாக்கப்படுவதுடன் ரூபாயில் நாலணாவிகிதம் நாம் இந்த நாட்டின் எஜமானர்களாகவும் இருக்கமுடியும்.

3. உத்தியோகங்களிலும், ராணுவத்திலும் 25 சதவிகிதம் முஸ்லிம்கள் இடம்பெறமுடியும்.

4. அரசியல் நிர்ணய சபையிலும், இந்திய சர்க்காரிலும் 25 சதவிகிதம் நமக்கு பிரதிநிதித்வம் கிடைக்கும். குடியரசு தலைவர் தேர்தலில் நான்கு தடவைக்கு ஒரு முறை ஒரு முஸ்லிமுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

பிரிவினைக்கு முன் இந்திய அரசியலில் முஸ்லிம்கள் வகித்த அதே அந்தஸ்து மீண்டும் அவர்கள் அடைய முடியும் என்பது நிச்சயம். இன்று முஸ்லிம்களுடைய ஆதிக்கத்திலிருக்கும், பிரதேசங்கள் அவர்களுடைய ஆதிக்கத்திலேயே இருந்துவருவதுடன் இந்தியாவிலும் கால் பங்கு உரிமை உள்ளவர்களாகவும் ஆகலாம். இந்த லட்சியத்தை அடைவதற்காக நாம் பாடுபடவேண்டும். முதலாவதாக நாலரை கோடி இந்திய முஸ்லிம்களிடையே வாக்கெடுப்பு நடத்தியாகவேண்டும். இரண்டாவதாக பாகிஸ்தான் நிர்வாகத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் ஹிட்லர் கோஷ்டியை தகர்க்க முயற்சிக்க வேண்டும். ஆனால் இந்தியா மீண்டும் ஐக்கியப்படுவதற்காக இந்திய முஸ்லிம் அல்லாதார் நம்முடன் சேர்ந்துழைக்க முன்வருவார்களா என்பது சந்தேகம்தான். ஆயினும் இன்று இந்தியர்களிடையே காங்கிரஸ் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது. இன்று மாகாணங்களிலும் மத்தியிலும் காங்கிரஸ் ஆட்சி நடந்துகொண்டிருக்கின்றது. அவர்கள் நினைத்தால் இந்திய ஐக்கியத்தை மீண்டும் உருவாக்கமுடியும், இரும்பு பழுத்திருக்கும் பொழுதே தட்டி நிமிர்த்திக்கொள்ள வேண்டுமென்று சொல்லுவது வழக்கம் இந்திய ஐக்கியவேலை இன்றுள்ள சூடு தணிந்துபோவதற்கு முன்பே பூர்த்தியடையவேண்டியது அவசியம் அதிகமாகப்போனால் ஒன்றிரண்டு வருஷங்களுக்குள்ளேயே இந்த வேலையை முடிக்க நாம் முயலுவோமாக!

### யாருக்கு வெற்றி ?

முஸ்லிம்கள் சிரித்த முகத்துடன் பிரிவினையின் கொடிய விஷத்தைக் குடித்தனர். கண்மூடித்தனமாய் மிஸ்டர் ஜின்னாவை பின்பற்றியதன் நாசகரமான விளைவுகளை அனுபவித்து ஆயிற்று ஆயினும் பிரிவினையின் பரிதாபகரமான பலாபலன்களை அனுபவிக்க வேண்டிய கட்டம் இன்னும் வந்துவிடவில்லை. ஆகஸ்ட் 15-க்குப்பிறகு இன்றுவரை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் நாசம் விஷத்தைக் குடித்தவுடனே ஏற்படக்கூடிய தொண்டைக்கசப்புப் போன்றதேயாகும். விஷத்தின் கொடிய விளைவுகள் குறிப்பிட்ட ஒருகாலத்திற்குப் பிறகுதான் வெளிப்படும். பிரிவினையின் உண்மையான விளைவுகள் இனிமேல்தான் வெளியாகும். தொண்டைக் கசப்பையே தாங்கமுடியவில்லை என்றால் துன்பம் தரும் விளைவுகளை எப்படித் தாங்கப்போகிறோம் என்று தெரியவில்லை.

இங்கிலேயிலும்கூட லீகர்களில் சிலர் மிஸ்டர் ஜின்னுவையும், அவர் அடைந்த வெற்றியையும் குறித்து வானளாவப் புகழ்ந்து பேசிக்கொண்டிருப்பதுதான் பரிதாபகரமான விஷயமாகும்.

"63 வருஷங்கள் எத்தனையோ போராட்டங்கள், நடத்தி மாபெரும் தியாகங்கள் செய்த பிறகு காங்கிரஸ் சுதந்திரம் பெற்றிருக்கின்றது. ஆனுல் நம்முடைய காயிதே ஆஜம் எவ்வித தியாகமும் இன்றி உட்கார்ந்த இடத்திலேயே பாகிஸ்தான் வாங்கிவிட்டார். வெகு சில நாட்களில் புதியதொரு ராஜ்யத்திற்கு அடிக்கோலியது அவருடைய பரந்த அரசியல்ஞானத்தையும் விவேகத்தையும் எடுத்துக் காட்டுகிறது. அவருடைய மகத்தான வெற்றியால் வருங்கால சரித்திரத்தின் முக்கிய வீரராக விளங்கப்போகிருர்" என்றெல்லாம் இந்த அப்பாவிகள் பேசும்போது அவர்கள்மீது இரக்கப்படாமல் இருப்பதற்கில்லே இந்த நண்பர்கள் உண்மையை மறந்தே பேசுகின்றனர்.

### நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும்....

காங்கிரஸ் மகாசபை நடத்திய போராட்டத்தின் பயனுக இந்தியா சுதந்திரம் அடைந்தது காங்கிரஸ் போராடாமல் இருந்திருந்தால் விடுதலே என்ற பேச்சே இருந்திருக்காது இந்தியா சுதந்திரம் அடைந்திருக்கவில்லேயென்ருல் பாகிஸ்தானும் இல்லே. இந்திய டொமினியனும் இல்லே. இன்றைக்கும் காங்கிரஸ் மகாசபை மட்டிலும் பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு சுதந்திரக் கோரிக்கையைக் கைவிடும் பக்ஷத்தில் பாகிஸ்தான் உள்பட இந்தியா பூராவும் திரும்பவும் வெள்ளேப் பறங்கிஸ்தாஞகவே போய் விடும் அதைத் தடுக்க மிஸ்டர் ஜின்னுவால் முடியாது

எனவே தியாகமின்றி மிஸ்டர் ஜின்னுவுக்கு பாகிஸ்தான் கிடைத்துவிடவில்லே இந்திய சுதந்திரத்திற்காகவோ, பாகிஸ்தானுக்காகவோ மிஸ்டர் ஜின்னு கோஷ்டியார் தியாகம் செய்யவில்லே என்பது உண்மை. ஆயினும் காங்கிரஸ் செய்த தியாகத்தின் பலனுகத்தான் அவர்களுக்கும் பாகிஸ்தான் கிடைத்திருக்கிறது அகில இந்திய சுதந்திரமே காங்கிரஸின் லட்சியம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கோ, அல்லது சமூகத்திற்கோ அல்ல இந்தியா விடுதலே அடைந்தபோது அத்துடன் சிந்து,பஞ்சாப், வங்காளம், எல்லேப்புறம், பலுஜிஸ்தான்மாகாணங்களும் விடுதலேபெற்றன. வெள்ளேயர்களின் பின்பலத்தைக்கொண்டு குறுக்கே புகுந்த மிஸ்டர் ஜின்னுவுக்கும் பாகிஸ்தான் கிடைத்துவிட்டது. அவ்வளவுதான்.

1930-ல் காங்கிரஸ் நடத்திய சிவில் சட்ட மறுப்பினல் மாகாண பொறுப்பாட்சி கோரிக்கை ஒப்புக்கொள்ளப்பட்டு 1939-ம் வருஷம் இந்திய சர்க்கார் சட்டம் அமுலுக்கு வந்தது. ஐக்கிய மாகாணம், பீஹார், சென்னே முதலிய மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிசபைகள் அமைந்ததைப்போலவே சிந்து, வங்காள மாகாணங்களில் லீக் மந்திரி சபைகளே அமைக்க லீகர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சிவில் சட்ட மறுப்பில் லீக் கலந்துகொள்ளவில்லே. ஆயினும் காங்கிரஸின் போராட்டம் வெற்றியடைந்த போது அந்த வெற்றியின் பலனே அனுபவிக்க லீக் மறுக்கவில்லே.

1942-ம் வருஷம் காங்கிரஸின் "வெள்ளேயனே வெளியேறு" போராட்டம் வெள்ளேயர்களேப் பணியவைத்து இந்திய சுதந்திர கோரிக்கைக்கு வெற்றியை வாங்கிக்கொடுத்து அதனுல் முஸ்லிம் பிரதேசங்களும், காங்கிரஸின் போராட்ட சமயத்தில், பரிபூரணமாய் வெள்ளேயருடன் ஒத்துழைத்த சிக்கிய பிரதேசமும், சமஸ்தானங்களும்கூட விமோசனமடைந்தன.

### பந்திக்கு முன்னும் படைக்கு.........!

ஏகாதிபத்திய பிடியிலிருந்து நாட்டை விடுவிக்க மிஸ்டர் ஜின்னு ஒன்றும் செய்யவில்லே. அதுமட்டுமின்றி சுதந்திரத்திற்குப் போராடியவர்களே நையாண்டியும் செய்துவந்தார். மூன்ருவது மனிதனிடமிருந்து பிதுரார்ஜித சொத்தை மீட்க தான் ஒன்றுமே செய்யாமல், கஷ்டப்பட்டு சொத்தை மீட்டிய சகோதரனுடன் பங்கு பிரிப்பதில் சற்று தாமதம் ஆனவுடன் சண்டைக்கு தயாராய்விடும் ஒருவனின் உதாரணம் மிஸ்டர்ஜின்னுவுக்கு முற்றிலும் பொருந்தும்.

200 வருஷ பிரிட்டிஷ் ஆட்சியில் மிஸ்டர் ஜின்னுவுக்கு சட்ட மறுப்பு தைரியம் பிறந்ததே இல்லே வெளியேறப்போவதாக வெள்ளேயர் அறிவித்த மாத்திரத்தில் காயிதே ஆஜம் சட்ட மறுப்புக்குத் துணிந்துவிட்டார்.

### கோடரிப் பெருமை யாருக்கு ?

காங்கிரஸின் போராட்டத்தினல் நாடு சுதந்திரம் அடையும் கடைசிக் கட்டத்தில் நாட்டின் ஐக்கியத்தைக்குலேத்து கூறு போட்டு பங்கு கேட்பதுதான் சாமர்த்தியம் என்ருல், நாமும் மிஸ்டர் ஜின்னுவை மெச்சத்தயார். ஆனல் தியாகமின்றி பாகிஸ்தான் அடைந்ததாகப் பெருமைப்படும் லீக் லீடர்கள் தியாகமின்றியே பாகிஸ்தானே பாதுகாத்துவிடவும் முடியாது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளட்டும். நாட்டைப்பிளந்தவர்களெல்லாம் சரித்திரத்தில் வீரர்களாக இடம்பெற்றிருக்கும் பக்ஷத்தில் மிஸ்டர் ஜின்னுவும் அவர்களில் ஒருவராக விளங்கமுடியும்.

(தொடரும்)

# முஸல்மான்களின் தவருன போக்கு

(மௌலானு ஹுஸைன் அஹ்மத்மதனி அறிவுரை.)

★

கலவரங்களால் முஸ்லிம்களுக்கு பெருவாரியான உயிர்ச்சேதம், ஏராளமான பொருட்சேதமும் ஏற்பட்டிருக்கிறது. வாழ்க்கை வசதிகள் இழந்து, கட்டுக்கோப்பு சிதறுண்டு, மனுேதிடம், உறுதி, நம்பிக்கை, தைரியம், சகிப்புத்தன்மை, முதலிய சிறந்த குணங்களையும் பரிகொடுத்துவிட்டனர், என்பது உண்மை.

ஆயினும் இந்த அழிவு எதிர்பாராமல் விதிவசத்தால் சம்பவித்ததா? அழிவை தவிர்க்க முடியாத நிலைமையில் முஸ்லிம்கள் செயலற்றுப்போய் இருந்தார்களா? அல்லது அவர்களுடைய தவருன முயற்சிகளின் தவிர்க்க முடியாத இயற்கை விளைவுகளா? அவர்களின் கடந்த கால போக்கின் விளைவுகள் நாசத்தையும் அழிவையும் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

முஸ்லிம்கள் கடவுளை மறந்தனர். அவருடைய ஏவல், விலக்கல்களை அலட்சியம் செய்தனர். தான் தோன்றிகளாய் இஸ்லாத்தின் உயரிய போதனைகளை புரக்கணித்தனர். இஸ்லாமிய கலாச்சாரத்தை தாங்கி நின்ற உண்மை முஸ்லிம்களுக்கு இழிவு செய்தனர், கேவலப்படுத்தினர். சுயநலத்தின் அடிமைகளாய் ஆசையை வணங்கினர். ஆண்டவனின் முதல்தர எதிரிகளைப் பின்பற்றி நபியவர்களின் பரம சத்ருக்களை நம்பினர்.

நாம் அனுஷ்டிக்காத தவருன போக்கும் உண்டா? அழிவு, நாச வழிகளில் நாம் நடக்காமல் விட்ட ஒருவழியேனும் பாக்கி உண்டா? நம்முடைய செய்கைகளை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

நம் தலைவர்கள் கலகப்பிரியர்களாகவும், நாம் அலட்சியமாகவும் இருக்கவில்லையா? நம்மில் நேர்மையான வழியை நாடியவர்கள் எத்தனை பேர்? சத்திய சங்கநாதத்துக்கு செவிசாய்க்க தயாராய் இருந்தவர்கள் எத்தனைபேர்? உண்மை முஸ்லிம்கள் என்று சொல்லிக்கொள்ள உரிமை பெற்றிருந்தவர்கள் எத்தனை பேர்? அப்படியானுல் அழிவும், நாசமும் நாமே நம் கைகளால் தேடிக்கொண்டதன்றி வேறு யாரால் ஏற்பட்டிருக்கமுடியும்?

## இயற்கை நியதி

இம்மாதிரி செய்கைகள், நடவடிக்கைகளுக்குப் பிறகும் கடவுள் நமக்கு கவுரவம், உயர் அந்தஸ்து, அளித்து நாட்டின் வாரிசுகளாக்கி தலை நிமிர்ந்து நிற்க சந்தர்ப்பம் கொடுப்பார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? இயற்கை நமக்காக என்று தன் விதியை மாற்றிக்கொள்ள முடியாது. திரு குர் ஆன் நம்மை எச்சரித்தே இருந்தது —

"இது அவர்களுடைய கைகளே செய்த செய்கைகளால் ஏற்பட்டதேயாகும். ஆண்டவன் தன்னுடைய பக்தர்கள் மீது அநியாயம் செய்பவனல்ல. எதுவரையில் அவர்களே தங்கள் செய்கைகளை மாற்றிக்கொள்வதில்லையோ ஒரு ஜாதியாருக்கு அளித்த செல்வங்களை ஆண்டவன் மாற்றக் கூடியவனல்ல."

## மேலும் குர் ஆன் கூறுவதாவது:—

"நாம் ஒரு ஜனக் கூட்டத்தை அழிக்க எண்ணினுல் அதிலுள்ள சுகவாசிகளை அமர்த்துகிறேம். பிறகு அவர்கள் ஜனங்களிடையே கலகங்களை தூண்டி விடுகின்றனர். நம்முடைய சங்கல்பம் பூரணமடைந்து சரியான முறையில் அந்த ஜனக் கூட்டத்தை நாம் நாசம் செய்கிறேம்."

## திரு முஹம்மது நபி அவர்கள் எச்சரித்திருப்பதாவது:—

"உங்களிடையே ஒழுக்கம் மிகுந்தவர்கள் தலைவர்களாகவும், செல்வவந்தர்கள் தர்ம சிந்தனையுள்ளவர்களாகவும், இருப்பதுடன் உங்கள்பிரச்னைகள் பரஸ்பர ஆலோசனையின் மீதும் தீர்க்கப்பட்டால் பூமியின் வயிற்றைவிட அதன் மேல் பரப்பு உங்களுக்கு நன்மை அளிக்க முடியும். என்று உங்கள் தலைவர்கள் உங்களை விட மட்டமானவர்களாகவும், செல்வவந்தர்கள் லோபிகளாகவும், உங்கள் பிரச்னைகளை தீர்ப்பவர்கள் பெண்களாகவும் இருப்பார்களோ அன்று பூமியின் மேல் பரப்பைவிட அதன் வயிறு உங்களுக்கு உகந்ததாக இருக்கும்."

குர் ஆனும் நபியவர்களும் விடுத்த எச்சரிக்கைகள் நம்மை விழிப்படையச் செய்தனவா? கலவரங்களைத் தூண்டிய நம் தலைவர்களை தடுத்து நிறுத்தினோமா? அல்லது முஸ்லிம் பொதுமக்களை ஒழுக்கக்கேடான காரியங்கள் செய்யாமலிருக்க உபதேசித்தோமா? இல்லை!

### சரித்திரத்துடன் அலட்சியம்

இஸ்லாமியசரித்திரஏடுகள் உங்கள்முன்னால் விரிந்து கிடந்தன. இஸ்லாமை அழிக்க அப்துல்லா பின் ஸபா செய்த சூழ்ச்சிகள், ஷீயாக்களால் ஹஜ்ரத் அலி, ஹஜ்ரத் ஹுஸைன் அனுபவித்த துன்பங்களும், கொலையும் தௌஸீ, இப்னெ அல்கமா செய்த பித்தலாட்டங்களால் அப்பாஸியா கிலாபத்தின் வீழ்ச்சி, சையத் சகோதரர்களால் முகல் சாம்ராஜ்யத்தின் அழிவு, மீர்ஜாபர், மீர்சாதிக் செய்த துரோகத்தால் சிராஜுத்தௌலா, திப்பு ஸுல்தான் இருவரின் தோல்வி முதலிய இஸ்லாமிய சரித்திரப் பூர்வமான ரத்தக் கண்ணீர் வடிக்கத்தக்க சம்பவங்கள் நமக்கு விழிப்படையச் செய்யவும், படிப்பினை கற்றுக்கொடுக்கவும் போதுமானவையாக இருந்தன. ஆயினும் நீங்கள் விழிக்கவில்லை.

திரு குர் ஆனும், நபியவர்களின் திருவாசகங்களும் வழி காட்டின. கண்களை இறுக மூடிக் கொண்டீர்கள். தவறான போக்கினால் சமூகங்கள் இதற்கு முன் அடைந்த துர்கதி பயமுறுத்திக் கொண்டிருந்தது. காதுகளை பொத்திக் கொண்டீர்கள். இஸ்லாமிய சரித்திரத்தின் படிப்பினைக்குரிய சம்பவங்கள் அறிவுறுத்தின. விழிப்படையவில்லை. ஜமீயதுல் உலமாயே ஹிந்த் அடிக்கடி எச்சரித்து வந்தது. மத, கலாச்சார கடமைகளை நினைவூட்டியதுடன் எதிர்கால அபாயங்களில் உங்கள் கவனத்தை திருப்ப தீவிரமாக முயற்சித்தும் வந்தது. உங்கள் காதுகளில் ஒன்றுமே ஏறவில்லை.

ஜமீயதுல் உலமா அன்றே எச்சரிக்காமல் விட்ட ஒன்றும் இன்று புதிதாக நடந்து விடவில்லை. உங்கள் நன்மையையே நாடிய தன்னலமற்ற அந்த உண்மை ஊழியர்களுக்கு கிடைத்த பலன் என்ன? அவர்களுடன் நீங்கள் நடந்துகொண்ட விதத்தை நான் வர்ணிக்க விரும்பவில்லை. உங்கள் அறிவு, பேச்சுத்திறன், பேனா முனை, கை பலம் எந்த அளவுக்கு ஒத்துழைக்க முடிந்ததோ, அந்த அளவுக்கு அவர்களை வெறுப்பதில் நீங்கள் உபயோகித்தீர்கள்.

இவ்வளவையும் அவர்கள் சகித்தார்கள் ஆனால் கடமையை செய்யாமல் இருக்கவில்லை. ஊர் ஊராகச் சென்று, பத்து கோடி இந்திய முஸல்மான்களை ஸ்பெயினில் முஸ்லிம்கள் அடைந்த துர்கதிக்கு அழைத்துச் செல்லும் தலைமையின் மோசடியை எடுத்துச்சொல்லி தங்கள் கடமையை நிறைவேற்றியே வந்தனர்.

### அசிரத்தையின் விளைவுகள்

ஜமீயதுல் உலமாவை விட்டு நீங்கள் நம்பிய உங்கள் தலைவர்கள் எப்பேர்ப்பட்ட நெருக்கடியில் உங்களை விட்டுச் சென்று விட்டனர் என்பதை கண்களை திறந்துகொண்டு பார்த்தால் தெரியும். இன்றைய நிலைமையைக் குறித்து நபியவர்களும், குர் ஆனும் அன்றே எச்சரித்திருக்கவில்லையா?

### திரு நபியவர்கள் கூறியதென்ன:—

“சாப்பிட வரும்படி ஒருவரையொருவர் அழைப்பதைப்போல் உங்களை எதிர்க்க இதர சமூகங்கள் ஒன்றையொன்று அழைக்கப்போகும் நாள் சீக்கிரமே வந்துகொண்டிருக்கிறது.” ஒருவர் “நம்முடைய எண்ணிக்கை குறைவினால் அன்று அவ்விதம் நடக்குமா” என்று கேட்டார் “இல்லை. அன்று நீங்கள் பெரிய அளவில் இருப்பீர்கள். ஆனால் குப்பை கூளமாக. வெள்ளத்தில் மிதந்துவரும் குப்பை கூளத்தைப் போல். உங்கள் எதிரிகளின் மனதிலிருந்து கடவுள் பயத்தை போக்கி விடுவார் உங்கள் மனதில் பலஹீனத்தை உண்டாக்கி விடுவார்.” என்று பதிலளித்தார். “பலஹீனம் என்ன?” என்றார் கேட்டவர். “உலக ஆசையும் மரண பயமும்” என்று பதில் கிடைத்தது.

இன்று நமக்கு ஏற்பட்டிருக்கும் அழிவு இதற்கு முன் பல சமூகங்கள் தங்கள் செய்கைகள், நடவடிக்கைகளுக்காக அனுபவித்த அதே அழிவல்லவா? பதிமூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே திரு குர் ஆன் அடியில் வருமாறு நமக்கு எச்சரிக்கை விடுக்கவில்லையா?

“கேவலம், இழிவு அவர்களை ஆக்ரமித்துக் கொண்டு விட்டது. கடவுளின் கோபத்திற்கு அவர்கள் இலக்கானார்கள்.”

### மேலும் குர் ஆன் கூறுவதென்ன:—

“அந்த ஜனங்கள் எத்தனையோ சோலைகள், ஊற்றுக்கள், வயல்கள், பிரம்மாண்டமான வீடுகள், சுகம் தரும் உபகரணங்கள் அனைத்தையும் விட்டுச் சென்றார்கள். அதில் அமைதியாக அவர்கள் வாழ்ந்து வந்தனர். வேறு ஒரு சமூகத்தை நாம் அதற்கு வாரிசாக்கினோம். அச்சமயம் அவர்கள் மீது வானுலகமும் அழவில்லை, பூவுலகமும் கண்ணீர் வடிக்கவில்லை. அவர்களுக்கு அவகாசமும் அளிக்கப்படவில்லை.”

இன்று இந்திய முஸ்லிம்கள் அடைந்துள்ள அதிர்ச்சி, அப்பாஸியா கிலாபத், முகலாயசாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றபோது இஸ்லாமுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட சரித்திர பூர்வமான அதிர்ச்சி போன்றதாக இல்லையா? கலவரங்களால் ஏற்பட்ட டில்லியின் நாசம் பாக்தாத் அழிவுக்கு மாறுபட்டதா? கிழக்குப் பாஞ்சாலத்தின் பல்லாயிரம் மசூதிகள், மத்ரஸாக்கள், வாசகசாலைகள், தர்காக்கள், தர்ம சொத்துக்களின் அலங்கோலம் பாக்தாதை அடுத்த இஸ்லாமிய நாடுகளின் அலங்கோலத்தைவிட குறைத்து மதிப்பிட முடியுமா? அப்பாஸியா கிலாபத்தின் சேனைகளை ஜிஹாத்தின் புனிதப் பெயரால் சிதறடித்துவிட்ட தௌஸி, இப்னே அல்கமாவைப்போலவே இஸ்லாமிய ராஜ்யத்தின் புனிதப் பெயரால் பத்துகோடி இந்திய முஸல்மான்களின் ஐக்கிய சக்தியை லீக் தலைமை சிதறடித்துவிடவில்லையா?

தரித்திரம் பிடித்த காக்கைக்கு தலைமைப் பதவி கிடைத்து விட்டால் நாசத்தை தவிர வேறு எந்த வழியில் அது அழைத்துச் செல்லும்?

## பீதி அடைய வேண்டாம்

மதத்தின் உயரிய கருத்துக்களை புறக்கணித்துவிட்டு நீங்கள் பின்பற்றிய தலைவர்கள் கடந்த 10 வருஷங்களாக உங்களுக்கு பயங்கொள்ளித்தனத்தின் விஷத்தை ஊட்டி வந்திருக்கின்றனர். இன்று நீங்கள் பீதி அடைந்திருப்பதை பார்க்கவும் வெட்கமாயிருக்கிறது. தலைதெறிக்க ஓடுகின்றீர்கள். எங்காகிலும் ஓடி தெய்வ தண்டனையிலிருந்து தப்பிவிட முடியுமா? அல்லது உங்களைத் தொடர்ந்து மரணம் அங்கு வாராமல் இருந்துவிட முடியுமா? கடந்தகால செய்கைகளின் விளைவுகளுக்குப் பயந்து எங்கே ஓடுகின்றீர்கள்? இஸ்லாமும், கோழைத்தனமும் ஒன்றுசேரா முடியாது.

பயத்தை விட்டு கடவுளுக்கு பயந்து நடவுங்கள். உண்மை முஸ்லிம்களாக இருந்து வாழுங்கள். இஸ்லாமின் உயரிய போதனைகளை அலட்க்ஷியம் செய்யாதீர்கள். செய்த தவறுகளுக்கு பச்சாதாபப்பட்டு திருந்துங்கள். நீங்களும் மனிதர்கள் தான். கடவுள் மிருகங்களின் முறையீட்டையும் கேட்கக் கூடியவர் என்பதை மறக்க வேண்டாம். எனவே உங்கள் துன்பங்கள் நீங்க ஒரே ஒரு வழி நீங்கள் தெய்வத்தின் பக்கம் திரும்புவதேயாகும்.

ஒரு சுயநலத் தலைவரின் பேச்சை நம்பி நீங்கள் உட்கொண்ட விஷத்தின் தீங்குகளை இன்று பிரத்யட்சமாய் பார்க்கின்றீர்கள். சமூகத்தின் உடலில் பரவிவிட்ட அந்த கொடிய விஷத்தின் நாசகரமான தன்மையை நாளாவட்டத்தில் போக்கி உங்கள் துன்பங்களை அகற்றுவதற்காகத்தான் நாங்கள் பாடுபடுகிறோம். இதுவரையில் உங்கள் கோபத்திற்கும் ஆத்திரத்திற்கும் இலக்காய் இருந்து வந்த உங்கள் பழைய ஊழியர்கள் இன்றைக்கும் உங்கள் எதிர்காலத்தை உருவாக்க பாடுபட்டு வருகின்றனர். நீங்களும் நம்முடன் சேர்ந்து ஒத்துழைத்து உதவி செய்தாலன்றி நாம் ஒன்றும் செய்ய முடியாது. அரசியல், கலாசார நலன்கள் காக்கப்பட உகந்த வழியில் முயற்சிக்கவேண்டும்.

இதுவரை நீங்கள் அனுஷ்டித்த வகுப்புவாதப் போக்கு சென்ற காலத்திலும் உங்கள் அரசியல், கலாசார முன்னேற்றத்திற்கு தடை செய்திருக்கின்றது. எதிர்காலத்திலும் நீங்கள் கௌரவமாக அமைதியுடன் வாழ முடியாமல் செய்து விடும். இதர சமூகங்களுடன் சுமுகமாய் பழகி இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைப்பதைத்தவிர இன்றைக்கும் நம்மிடம் வேறு திட்டமில்லை.

## உண்மை விசுவாசம்

இந்த நாடு வளம்பெற நீங்களும் ரத்தம் சிந்தியிருக்கின்றீர்கள். இனியும் இந்த நாட்டிற்காக ரத்தம் சிந்துவோம் என்று சபதம் செய்யுங்கள். மற்றவர்களுக்கு இருக்கும் அதே உரிமை இந்த நாட்டிலிருக்கும் உங்களுக்கும் உண்டு. அதைப்போலவே தேச சேவையிலும் உங்களுக்கு பொருப்பு அவசியம். விசுவாசத்தை தெரிவிக்க நீங்கள் கையாளும் முறை அவசியமுமில்லை. நன்மையும் பயக்காது. முற்போக்கு சக்திகளுடன் ஒத்துழைப்பதே நாட்டின் உண்மையான விசுவாசம். வகுப்புவாத விஷக்கிருமிகளை போக்குங்கள். முன்னேற்றம் கௌரவம், சுதந்திரத்திற்கு அவை அபாயம் விளைவிக்கக் கூடும். விசுவாசத்தை தெரிவிக்கும் பழைய முறைகள் இன்று மாறிவிட்டன. அதிகார வர்க்கத்திற்கு விசுவாசம காட்டுவதில் அர்த்தமில்லை. சுதந்திர ஜனநாயக நாட்டிற்கு மக்களே யஜமானர்கள். நம்முடைய ஓட்டுக்களைப் பெற்றுத்தான் நிர்வாகிகளாக வர முடியும். இந்த நாட்டின் நிர்வாகிகள் நம்முடைய பிரதிநிதிகள். நம்முடைய உயிர், உடை, கௌரவம் அமைதியை காப்பாற்றும் பொருப்பை அவர்களிடம் நாம் ஒப்படைத்திருக்கிறோம். பொது மக்களுக்கு விசுவாசமாக நடப்பதாய் நிரூபிக்க வேண்டியது அவர்கள் கடமை. நாம், நமக்கும், நாட்டிற்கும் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால் அரசாங்கத்திற்கும் விசுவாசிகளாக இருக்கமுடியும்.

---

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, Kadalangudi E. St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.